*gistered No. M. 2095.*

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 APR 1927
MADRAS

# ஞானோதயம்.

—x—

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம், முதலிய
உயர்நல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி 17 } 1927-ஹு மார்ச்சு-மீ 11௳ { பகுதி 9

## பொருளடக்கம்.

1. மயித்திரேயர் துதி—வி. எஸ். அருணாசலம் பிள்ளை ... 231
2. குறிப்புகளும் சமாசாரங்களும் ... 232
3. தாய்மார்களின் சங்கம்—ஹெரால்ட் ஆப்திஸ்டார் —(பத்திராதிபர் மொழிபெயர்ப்பு) ... 236
4. கீதாசாரம் கிருஷ்ணதாஸர் P. R. (சுந்திரராஜய்யர் —மொழிபெயர்ப்பு) ... 239
5. பிரம்மஞானியின் சித்தவிருத்தி—பிஷப்லெட்பிடர் அவர்கள் உபன்யாசம் —(பத்திராதிபர் மொழிபெயர்ப்பு) ... 245
6. பிரமாணவாக்கியங்கள் ... 253
7. தியானக்கிரம விஷயம்—K. S. இராமச்சந்திரய்யர் ... 255

பத்திராதிபர்—V. இராமச்சந்திர நாயுடு, எனங்குடி,
தஞ்சாவூர் ஜில்லா.

சந்தா விபரம்:—
நாடு ரூ 1—0—0, வெளிநாடு ரூ 1—8—0,
தனிப்பிரதி ரூ 0—2—0.

ராமச்சந்திரா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

## பத்திராதிபர் வேண்டுகோள்.

நம் ஞானோதயப்பத்திரிகையில் சில அச்சுப்பிழைகள் நேர்ந்து விடுவதை நமது பத்திரிகா நேயர்கள் தயவுசெய்து பொறுத்துக்கொள்ள வேண்டுகிறோம். சென்றமாத சஞ்சிகையில் 206-ம் பக்கத்தில் 16-வது வரியில் ஜயமிருக்கட்டும் என்ற பதத்துக்கு பதிலாக ஐயமிருக்கட்டும் என்று தவறி அச்சில் விழுந்திருப்பதை நம் நேயர்கள் திருத்தி வாசிப்பார்களென்று நம்புகிறோம்.

பத்திராதிபர்.

### நமது மாற்றுப் பத்திரிகைகளின் விளம்பரம்.

## புதுயுகம்.

---

அஃது, ஸ்ரீ ஜகத்குருவாம் பரமாசாரிய மூர்த்தியின் அவதார வருகையைப்பற்றி சென்ற 16 வருஷங்களாக உலகமெங்கும் பிரஸித்தப்படுத்தி அவர் நல்வரவை ஜனங்கள் அங்கீகரிக்கும்படி விசேஷப் பிரயத்தனங்களைச் செய்துவரும் உதயதிசை நக்ஷத்திர மஹாஸபையின் தமிழ் மாதாந்தப் பத்திரிகை. அதன் ஆசிரியர்: அராவ்ஸாகிப் சு. வி. கனகசபைப்பிள்ளை. வருஷ சந்தா ரூ 1-8-0

E. N. வெங்கடபெருமாள் நாயுடு. B. A.

"புதுயுகம்" ஆபீஸ் கௌரவத் தலைவர்,

பென்ஷன் தாசில்தார், வளையற்காரத்தெரு, ஈரோடு.

---

### புஸ்தக வரவு.

ஞான இரகசிய சிந்தாமணி இக்காலத்தில் அனேகர்கள் வேதாந்த நூல்களிடத்து சிரத்தைக் குறைவுகாட்டிவருவதால் அவர்களை அவ்வித பராமுகத்தினின்று உண்மைவழியில் செலுத்துவிப்பதற்கு மேற்கண்ட நூல் மிகவும் சிறந்ததாகும். இவ்வித நூல்களை ஆதரித்தல் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கடமையாகும்.

இந்நூலின் விலை. அணு 8

கிடைக்குமிடம் "விசாலஹிருதயம்" காரியாலயம்,

பத்மநாபபுரம், தக்கலை. .B O.

REGISTRAR OF BOOKS
12 APR 1927
MADRAS

# ஞானோதயம்.

பிரம்மஞான மாதாந்தப் பத்திரிகை.

தொகுதி 17 | 1927-ஞூ மார்ச்சு-மீ 11௳ | பகுதி 9

## மயித்ரேயர் துதி.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

நேர்கோத்த திருவயனும் நிகரிலா நெடுமாலும்
நினைந்துங்காணா
நீர்கோத்த செஞ்சடையான் மனங்களிக்க நிருதர்குலந்
தகர்க்கவோர்ந்த
தார்கோத்த ஷண்முகன்றன் பெருங்கருணை தன்சிரசிற்
றரித்திங்கோங்கும்
சீர்கோத்த ஜகத்குருவாம் மயித்திரேயர் கழல்கள்
சென்னி சேர்ப்பாம்.

## கீர்த்தனை

இராகம் இந்துஸ்தானி காபி-தாளம் அடதாள சாப்பு.
7 அக்ஷரங்கள் (தகிடதகதக)

### பல்லவி.

குருவேநம: வோம் மயித்திரேயக்
குருவேநம: வோம் குஹசேவிதக்

### அநுபல்லவி.

குருவேநம: ஜகத்குருவேநம: தெய்வத்
தருவே......கற்பகத் திருவே யருள்வாயே (குரு)

210813

சரணம்.

(1) வருவாய்முனியே மாதுயர்போக்கித்
திருவாயினியே தாரகவின்ப
வுருவாயருவா யுளதா யிலதாய்க்
கருவாயுயிராய்க் கதியாயமைந்த சற் (குரு)

(2) சமரேயொழியத் தாரணியுய்யப்
புனலேபொழியப் புவியாலெங்குந்
தனமேகனமாய்ப் புனமேவனமாய்ச்
சினமேயினமாய் மனமேமகிழ்செய் நற் (குரு)

(3) கருணாநிதியே தருணமுமிதே
யருணாளிதுவே மனங்கொதிக்கும்
வருணாசிரமமும் மதபேதத்திரணமும்
ஒருநாளிலகன்றோட உதவிசெய்யருட் ஜோதிக் (குரு)

வி. எஸ். அருணாசலம்பிள்ளை

---

# குறிப்புகளும் ஸமாச்சாரங்களும்.

தென்னிந்திய பிரம்மஞானக் கிளைச் சங்கங்களின் 14 வது வருஷக்கூட்டம், வருகிற ஏப்ரல்மீ 15௳ முதல் 18௳ முடிய அடையாற்றில் நடைபெறும். பிரம்மஞான மஹாஸபையின் தலைவரும் உபதலைவரும் இப்பொழுது அன்னியதேச சஞ்சாரம் சென்றிருப்பதால், இம் மஹா நாட்டில் அவர்களிருந்து நம்மை நடத்துவதற்கில்லை. ஆயினும், அப் பெரியோர்கள் இல்லாதிருக்கும் சமயத்திலும் நமது சிரத்தாபக்திகளையும் உத்ஸாகங்களையும் தளரவிடாமல் காரியங்களைச் செய்யவேண்டியது நம் கடமை யாகையால் இத் தென்னாட்டிலுள்ள கிளைச்சங்கங்களின் மெம்பர்களும் அபிமானிகளும் அவசியம் இக் கூட்டத்திற்கு வந்திருந்து அது சிறப்பாய் நடைபெறச் செய்வார்களென்று நம்புகிறோம்.

இக் கூட்டத்திற்கு வருகிற மெம்பர்கள் ஒரு வாரம் முந்தியே ரூ 1 வீதம் ஸ்ரீமான். V. C. பட்டவர்த்தன் அடையார், சென்னை. என்ற விலாஸத்திற்கு, தங்களை டெலிகேட்டாகப் பதிவு



செய்துகொள்வதற்கு அனுப்பவேண்டும். தங்குவதற்குத் தனி இடம்வேண்டியவர்கள், பெரிய அறைக்கு ரூ 3ம் சிறு அறைக்கு ரூ 2ம் உடனே ஷை விலாஸத்திற்கு அனுப்பவேண்டும். அவ்வித அறைகள் அதிகமில்லாமையால் முன்னாடியே இம் மாதம் 26௳க்குள் தேவையுள்ளவர்கள் மனுச் செய்துகொள்ள வேண்டும். போஜனசாலையில் சாப்பாடு 1 க்கு 6 அணா வீதம் சார்ஜு செய்யப்படும். கோதுமை ஆஹாரம் அல்லது சப்பாத்தி ஆஹாரம் தேவையுள்ளவர்கள் 2 அணா அதிகம் செலுத்தவேண்டும். பணம் கொடுக்கமுடியாத மெம்பர்கள் தங்கள் லாட்ஜ் பிரெஸிடெண்டு அல்லது ஸெக்ரடெரியினிடமிருந்து அது விஷயங் கண்டு ஓர் கடிதம் கொண்டுவந்தால் இனாமாக போஜனம் அளிக்கப்படும். சிற்றுண்டிகளுக்கு பிரத்தியேகமான கட்டணம் விதிக்கப்படும்.

இக் கூட்டத்தில் எல்லா மெம்பர்களும் ஏக குடும்பஸ்தர்கள்போல் ஒருமித்து ஆனந்தமயமாய் இந் நான்கு தினங்களிலும் அடையார் க்ஷேத்திரத்தில் சேர்ந்து வசிக்கும்படி ப்ரோகிராம் தயார்செய்யப்பட்டு வருகின்றதென அறிகிறோம்.

... ... ... ...

டாக்டர் அன்னிபெஸண்டு அம்மாள் அவர்களின் அமெரிக்காதேச சஞ்சாரம் முடிவடைந்து, இப்போது ஸ்ரீமான் கிருஷ்ணாஜியுடன் கலிபோர்னியாவிலுள்ள ஓஹை என்னுமிடத்தில் தங்கியிருக்கிறார்கள். இந்த இயற்கை வனப்புவாய்ந்த பள்ளத்தாக்கில், 81ம் பிராயத்தையடைந்த நமது அன்னையார் இப்பொழுது ஓர் மஹத்தான கைங்கரியம் ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த விடத்தில் ஸ்ரீ ஜகத்குருவின் அலுவல்கள் நடைபெறுவதற்கும், இப்பொழுது அமெரிக்கா காலிபோர்னியா முதலிய தேசங்களில் அதிகமாய் உற்பத்தியாகிப் பரவிவரும் புதிய மனிதஜாதியின் நாகரீகத்தை ஸ்தாபித்து நடத்துவதற்கும் ஓர் மத்ய ஸ்தலம் ஸ்தாபிப்பதற்கு முயன்றுவருகிறார்கள். அதற்காக இப்பொழுது 465 — ஏகர் நிலம் வாங்கிவிட்டார்களென்று தெரியவருகிறது. 200000 - டாலர், அந்த ஸ்தாபனத்திற்குத் தேவையென்றும் இந் நன் முயற்சியில் அபிமானமுள்ள பலரிடமிருந்தும் அத் தொகையை நன்கொடைகளாகத் தாம் எதிர்பார்ப்பதாகவும் நமது அம்மையார் வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்த விடத்தில் நடைபெறப் போகும் காரியங்களின் விவரம் இது, இந்தியாவில் வெளிவந்திருக்கிறது. அதை அடுத்த சஞ்சிகையில் கூறுவோம்.

... ... ... ...

ஸ்ரீமான் கிருஷ்ணஜி சௌக்கியமாகவும் சந்தோஷமாகவும் ஓஹையில் தங்கியிருக்கிறார். அவர் இவ்வருஷம் ஆமென் நக்ஷத்திர மஹாநாடு நடந்தேறிய பிறகு இந்தியாவுக்குத் திரும்பி வரலாமென்றும் நமது அன்னையார் வருகிற ஜூலைமாத வாக்கில் திரும்பி வரலாமென்றும் அறிகிறோம். ஸ்ரீமான் ஜினராஜதாஸர் அவர்கள் தன் தர்மபத்னி ஸஹிதம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் நீண்ட யாத்திரை செய்வதற்காக சென்ற மாதம் சென்னையை விட்டுப் புறப்பட்டுப் போயிருக்கின்றார். திரும்பிவர சுமார் ஒரு வருஷம் செல்லுமென்று அறிகிறோம்.

... ... ... ...

உடுப்பி அதமாருமடாதிபதிகளான ஸ்ரீ விபுதப் பிரியதீர்த்த ஸ்வாமிகள் சென்னையில் சிறிதுகாலம் தாமதிக்க நேர்ந்தசமயத்தில் பல்வேறு அபிப்பிராயமுடைய ஹிந்து சமூகப்பிரமுகர்கள் பலருடன் சம்பாஷிக்கநேர்ந்தது. அப்பொழுது அவர்களனைவரும், ஹிந்து சமூகத்தினருடைய மனதை இப்பொழுது அலைத்துக்கொண்டிருக்கும் பல்வேறு சமூகப்பிரச்னைகளில் மதத்தலைவர்கள் தங்களுடைய கவனத்தைத் திருப்பி, அவைகளைப்பற்றி முடிவான அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறதென்றும், சமுத்திரயாத்திரைசெய்ய இப்பொழுது அனுமதியில்லாதவர்களுக்கு சமுத்திரயாத்திரை செய்ய அனுமதிகொடுக்காவிடில் அவர்கள் சமூகவாழ்வில் தகுந்த அந்தஸ்தை அடைய முடியாமல் பின்னடைந்து போய்விட நேரிடுமென்றும், இப்பொழுது அனுஷ்டானத்திலிருந்துவரும் தீண்டாமை நியமமானது கொடியதாகயிருக்கிறபடியால் அதைச்சிறிது தளர்த்தி விடாவிடில் ஹிந்து சமூகத்தினரில் பலர் வேறுமதங்களைத் தழுவநேர்ந்து அதனால் ஹிந்து சமூகத்தின் கட்டும் பலமும் செல்வாக்கும் குறைந்துபோய்விடுமென்றும், ஆலயப்பிரவேசத்திற்கும் ஆலயத்தில் தொழுவதற்கும் இப்பொழுது பலருக்கு அனுமதியில்லாமலிருப்பதை சாத்தியமானால் புனராலோசனை செய்வது உசிதமாக



இருக்குமென்றும்; தப்பான எண்ணங்களினால் வேறுமதங்களைத் தழுவிய ஹிந்துக்கள் மறுபடியும் தங்களுடைய பழயமதத்திற்குத் திரும்பிவிட விரும்புவதை ஹிந்து சமூகத்தின் நன்மையை உத்தேசித்து அனுதாபத்துடன் கவனிக்கவேண்டுமென்றும், இப்பொழுது அனுஷ்டானத்திலிருந்துவரும் பால்ய விவாகமுறையினால் ஹிந்து சமூகமானது தாஷ்டகமாகவும் மனோவலிமையுடையதாகவும் வளர்ச்சியடைவதற்குச் சாத்தியமில்லாது போய்விடுகிறதென்றும், ருதுவானபிறகு பெண்களுக்கு விவாகம் செய்துவைக்க வேண்டுமென்றும், பால்ய விதவைகளுக்கு விவாகம் செய்து வைக்க வேண்டுமென்றும் ஆசாரச் சீர்திருத்தக்காரர்கள் முக்கியமாக வற்புறுத்தி வருவதற்குக் காரணமாகச் சொல்லும் அம்சங்களுக்கு ஏதேனும் ஆதாரமிருந்து வருகிறதாவென்று பரிசீலனை செய்யவேண்டுமென்றும், இன்னும் இவைபோன்ற வேறுசில சமூகப்பிரச்னைகளையும் ஸ்வாமிகளிடம் விக்ஞாபனம் செய்து கொண்டார்கள்.

அதன்பேரில் ஸ்வாமிகள், ஹிந்துமத ஸ்தாபனங்களின் தலைவர்கள் நேரிலோ அல்லது பிரதிநிதிகள் மூலமாகவோ எல்லோருக்கும் சௌகரியமாக இருக்கக்கூடிய ஒரு மத்திய ஸ்தலத்தில் கூடி, பொதுஜனங்களுடைய மனதை அலைத்துக்கொண்டிருக்கும் இந்தப் பிரச்னைகள் விஷயத்தை சாஸ்திரோக்தமாகப் பரிசீலனை செய்து ஒரு முடிவான அபிப்பிராயத்தை வெளியிடுவது உத்தமமாக இருக்குமென்று அபிப்பிராயப்பட்டு பத்திரிகைகள் மூலம் மேற்கண்ட விஷயங்களை வெளியிட்டிருக்கிறார்கள். இத்தகைய மகாநாட்டைக் கூட்டிவைக்கலாமா வென்பதைப்பற்றியும், அவ்விதம் கூட்டிவைக்கலாமெனின், அதை எந்த விடத்தில் எப்பொழுது கூட்டிவைக்கலாமென்பதைப்பற்றியும், ஹிந்து மதத் தலைவர்களுக்கும் இவ்விஷயத்தில் சிரத்தையுள்ள இதரர்களுக்கும் இருந்துவரும் அபிப்பிராயங்களை அறிந்துகொள்ள ஆவலுடனிருப்பதாகவும், இந்த ஸமூகப் பிரச்னைகள் சம்பந்தமாக முடிவான அபிப்பிராயங்களை வெளியிடுவது அவசியமாகவும் அவசரமாகவு மிருப்பதால், இவ்விஷயத்தில் சம்பந்தப்பட்ட எல்லோரும் கூடிய சீக்கிரத்தில் இதைப்பற்றி ஆலோசித்து தங்களுடைய முடிவைத் தெரிவிப்பது உத்தமமென்றும், அவர்களுடைய

அபிப்பிராயங்களை, சென்னை, மைலாப்பூர், லஸ், "மாதவ பாக்" என்ற விலாஸத்திற்குத் தெரிவித்துக்கொள்ளலாமென்றும் ஸ்வாமிகள் கூறியிருக்கின்றார்கள்.

நம் ஹிந்து ஸமூகம் க்ஷேமமடைந்து விசேஷ முன்னேற்றமடைவதற்கு இதுவோர் சுபக்குறியென்றே நினைக்கவேண்டும். சாஸ்திரபண்டித சிகாமணிகள், இக்காலகதியையும் இப்பொழுது ஈசுவரஸங்கல்பம் இவ்வுலகில் நடந்தேறிவருகிற பான்மையையும் நன்குகெவனித்து அதற்குத்தகுந்த விசாலதிருஷ்டியுடன் தங்கள் சாஸ்திரப் பிரக்ஞையை உபயோகப்படுத்துவார்களென்று நம்புகிறோம். ஸர்வேசுவரன் அருள் புரிவாராக! சுபம்.

இச்சஞ்சிகையில், திவான்பஹதூர் ஸர், டி. ஸதாசிவய்யர் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு, நியூ இந்தியாப்பத்திரிகையில் வெளிவந்துள்ள வியாசத்தொகுதியிலிருந்து ஒரு பகுதியை மொழிபெயர்த்து, மகா-ள-ள-ஸ்ரீ P. R. ஸுந்தரராஜய்யர் அவர்கள் அனுப்பியுள்ளதை வெளியிட்டிருக்கிறோம். அப்பெரியாரின் வாய்மொழிகள் எவ்வளவுயர்பலனைத் தருவனவென்பதை நமது நேயர்கள் படித்தறிந்து கொள்வார்களாதலின், அதைப் பற்றி இங்கு கூறாது விடுத்தோம். அப்பேரறிவாளர் பூண்டுள்ள கிருஷ்ணதாஸர் எனும் அழகுடைப்பெரு நாமத்தைச் சொல்லும் பொழுதும் வரையும்பொழுதும் நினைவுதோறும் உண்ணின்றுருக்கும் பெருமகிழ்வுடைப் புண்ணிய கந்தங்கமழுவதொன்றாதலின், அதனையே யிங்கும் எடுத்தாண்டிருப்பது யாவருக்கும் சம்மதமேயாகுமென்பது எமது துணிபு.

---

## தாய்மார்களின் சங்கம்.

(215–வது பக்கத் தொடர்ச்சி.)

### வித்யாவிஷயம்.

2. தாய் தகப்பன்மார்களுக்கு இதைக் குறித்து விசேஷமாய் போதிக்கவேண்டும். இவ் விஷயமாய் பெற்றோர்களிடம் துவக்காமல் சிறுவர்களிடம் துவக்கப்பட்டது. அந்தோ பரிதா



பம்! தாய் தந்தையர்களுக்கு இந்த விஷயத்தில் ஒன்றுமே தெரியாது. அவர்களுக்கு இவ் விஷயங்களை போதிப்பதற்கு பிரத்யேகமாய்த் தரகதிகள் ஏற்படுத்தவேண்டும். அதில் சில தகப்பனுக்கு வேறாகவும் தாய்க்கு வேறாகவு மிருக்கவேண்டும். மற்றும் சில இருவர்களுக்கும் கலந்ததா யிருக்கவேண்டும். அதில் அவர்களுக்கு இவ்விஷயத்தில் எவ்வித பொறுப்புண்டோ அதை எடுத்துரைக்கவேண்டும். அவர்கள் எவ்விதம் குழந்தைகளுக்கு ஸ்திரீ புருஷ தர்மங்களைச் சொல்லவேண்டுமோ அவைகளை யெடுத் துரைக்கவேண்டும். ஸ்திரீ புருஷர்களின் உடமைகள் மிகவும் அபாரமான விஷயம். இவைகளைக்குறித்து பலவழிகளாலும் தெரிந்துகொள்ளுதல் மிகவும் முக்கியமானது. குழந்தைகள் இவ்விஷயத்தைக் குறித்து நன்றாய்த்தெரிந்து கொள்ளின், அவர்களுக்கு ஜாதி முன்னேற்றத்தில் விசேஷகௌரவம், உத்தரவாதம் ஸ்வபாவிகமாய் உண்டாகச் செய்தவர்களாவோம். இதைக்குறித்து அநேக தேசங்களில் கொஞ்சமட்டில் கைங்கரியம் செய்யப்பட்டுவரும் விஷயம் எனக்குத்தெரியும். அதோடு திருப்தியடைவதில் லாபமில்லை. பிரசாரம் எதேஷ்டமாய் நிகழவேண்டும். இது மாத்திரமன்று, குழந்தைகளின் சரீர அபிவிர்த்தியைக்குறித்தும் மனோ அபிவிர்த்தியைக்குறித்தும் உள்ள விஷயங்களைத் தாய் தந்தைகளுக்கு குறிப்பிட்டுரைக்கவேண்டும். இவைகளைக்குறித்து ஜனசமூகத்திற்கு சுலபமான உபன்யாசங்கள் அளிக்கவேண்டும். குழந்தைகளின் படிப்பு விஷயத்தில், மற்றவர்களைவிட, பொறுப்பு தாயின் மீது விசேஷமாயிருக்கின்றது. வருங்காலத்திய ஜாதி பரிணமம் தங்களையே ஆதாரமாகப்பற்றிநிற்கின்றதென பாலர் பாலிகைகள் நன்றாய்த்தெரிந்து கொள்வதற்குத் தாய் அவர்களுக்கு போதிக்கவேண்டும். இவ்விஷயத்தில் எவ்வளவுபேர் வாலிபர்கள் கஷ்டங்களுக்கு உள்ளாகின்றார்களென்பதை ஒரு தடவைகெவனித்துப்பாருங்கள். தாய் தகப்பன்களே தங்கள் குழந்தைகளுக்கு இவ்விஷயத்தைக் குறித்துபோதிக்கின், அவர்கள் யுக்தவயது வந்தபின்னர், இவ்வித கஷ்டங்களை அனுபவித்தேயிருக்கமாட்டார்கள். விவாஹமென்றால் என்னவென்றறியாத சமயத்திலேயே, சில தாய்மார்கள், தங்கள் பெண்களுக்குக் கல்யாணம் செய்கிறார்கள். சில தாய்மார்கள், பிரபஞ்சதத்துவத்தையறியாத தங்கள் குமாரர்களைப் பிரபஞ்சத்தில் செல்லவிட்டு நானாவிதகஷ்டங்களுக்கும் உட்படும்படி

செய்கிறார்கள். முதலெடுப்பிலேயே, தாயார், ஸ்திரீஸ்வபாவத்தைக்குறித்தும், அதைஎவ்விதம் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதையும், தன் குமாரர்களுக்குத் தெரியப்படுத்தியிருப்பளேயாமாயின், அவர்களுடைய கஷ்டங்களெல்லாம் தொலைந்தேயிருக்கும். தாங்கள் சேர்த்துக்கொள்ளும் ஸ்திரீ, ஜாதி உத்தாரணத்திற்காகக் கொடுக்கப்பட்ட தாயென, பாலர்கள் எப்பொழுது கிரஹிப்பார்களோ, அப்பொழுதே அவர்கள் ஸ்திரீகளின் விஷயத்தில் மாத்ருபாவத்தைக்காட்டி கௌரவிக்கக் கடவார்கள். ஸ்திரீகளை அதோகதிக்குத்தள்ளின், அவர்கள் மக்களைக்கூட கெடுத்ததாகவேயாகும் ஸ்திரீயைக் கெடுக்கின், ஜாதியின் பிராணனையே கெடுத்தோமென நாம் அறிந்துகொள்ளவேண்டும். இப்பொழுது நமது ஜாதி அனுபவித்துவரும் ரோகங்கள், தாங்கமுடியாத உபத்திரவங்கள் வருவதற்குக்காரணம், நமது அவிவேகத்தால் ஸ்திரீகளை கௌரவியாமல், கெடுத்தமையால் தானெனகிரஹிக்கவேண்டும். தக்க கல்விப்பிரசாரத்தால், இந்த நமது ஜாதிக்கஷ்டங்களை தவிர்க்கக்கூடும். அப்பொழுது தாய்கள் தம்குழந்தைகளுக்கு ஜாதி தர்மங்களைப் போதித்து, அவர்களை ஞானவான்களாகச்செய்து, ஜாதி முன்னேற்றத்திற்கு பெரியசக்தி சம்பன்னர்களாகச் செய்யக்கடவார்கள். இவ்விஷயத்தைக்குறித்து எவ்வளவோ பரிசோதனை செய்யவேண்டும். தாரக சங்கத்தில் வாலிபர்கள் அநேகர் இதைக்குறித்து விசேஷ ஆராய்ச்சிசெய்யலாம். ஜாதி தர்மங்கள் எங்கெந்த வழியில் வேலைசெய்கின்றனவோ அவற்றைத்தெரிந்து கொள்வதற்கு பரிசோதனைகள் விசேஷலாபகரமுள்ளவைகளாய் ஆகவேண்டும். ஆகையால் இதைக்குறித்து இம்மட்டில் செய்யப்பட்ட முயற்சி மிகவும் அற்பமாக விருக்கின்றது.

இன்னும்வரும்.

எமலிலட்டியன்ஸ்.

# * கீதாஸாரம்-அவ்வமயக் குறிப்புகள்.

## கிருஷ்ண தாஸர் தொகுதி. 23.

யான் சென்ற தொகுதியின் இறுதியில் வரைந்துள்ள விஷயத்தை இப்பொழுது விரித்தெழுதப்புகுவேன். அதாவது, பிதிருதேவதைகளை நோக்கித் தாம் செய்தோம்பவேண்டிய கடன்களை யிக்காலத்திய ஹிந்துக்களான நம்மனோர் அடியிற்கண்ட மூவித சாஸ்திர விதிகளின்படி ஒழுங்குடனிறைவேற்றி வருகின்றனராவென்பதே. ஜீவதசையிலிருந்துவரும் மூத்தவர்கட்கு அவர் மரணமடையும்வரைவேண்டிய வாதரவுகளைச்செய்து அவர்க்குச் சங்கடம், மனோவியாகுலம் வராமற்கட்டிக்காக்கும் கடன் ஒன்று. (2) இவ்வகையினர் மண்ணுலகை விட்டகன்றபின்னர் இவர்க்கின்றியமையாத் தேவைகளான மாதவருடக்கடன்களை யெல்லாம் இவர் சுவர்க்கம் புகும்வரை செய்து முடிப்பதால் அவர், தடையின்றி விரைவுடன் சுவர்க்கவுலகம் போய்ச்சேர்ந்து சுகமாய் வாழ்வுற்று நிற்கும்படி செய்தலும், அவ்விதமல்லாது இம்மூத்தோர் தாம் பூவுலகின் வாழ்க்கையிலிருந்தபொழுது தர்ம புத்தியுடன் செய்துகொண்ட பிரதிக்ஞை யல்லது இச்சைகளோ, பட்ட கடன்களோ, தாம் இறக்குமுன்னர் தம்மால் தீர்க்கப்படாது நின்றுவிட்டமையால் மனக்கவலையின் அழுந்தி மேற்செல்ல வகையில்லாமல் தடைப்பட்டு நிற்பின், அவர் கவலையாம் துன்பத்தை நீக்கி யப்பால் செல்ல விடுத்தற் கின்றியமையாக் காரியங்களைச்செய்து முடித்தலும் இரண்டாவது ஆகும். இங்கு இராமாயணக் கதையில் பகீரதன் தனது முன்னோரைக் கரையேற்ற முயன்ற பெருந்தவமான கங்கை கொணர்ந்ததைப்பாருங்கள்-(3) தான் இல்லறவாழ்க்கையில் புகுந்து, பிதுருக்களின் சந்ததி யறுபடாவண்ணம் தக்ககாலத்தில் உத்தம மனைவியுடன் சேர்ந்து, தனது காலத்திலும் சற்றுயர்ந்ததுவா மானிட வகுப்பைச்செய்து விடற்குதவும் குழந்தைகளை ஸ்தூல, காமிக மானசிக வியற்கையில் மேன்மையுள்ளவராய் ஜனிக்கும்படி செய்தல்.

இதன் கண் முதலாவதை விளக்குவாம். இவ்விஷயத்தில் மேற்றிசையார் வேண்டியவளவு தம் முன்னோர்க்குக் கடமை நிறைவேற்ற ஏற்பாடுகளைச் செய்திருப்பவரேயாயினும், ஜீவதசையிலு

* நியூ இந்தியாப் பத்திரிகையிலிருந்து மகா-ா-ஸ்ரீ P. R. ஸுந்தர ராஜய்யர் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

ள்ள தத்தம் தந்தை பாட்டன் முதலினர்க்கு பணிவாகி உபகாரங்களைச்செய்துவரும் நற்குணங்களை நெகிழவிட்டே காலங்கழிக்கும் பான்மையை விருத்திசெய் திருக்கின்றனர். வயதுசென்ற தன் தாதை கதியில்லாது கிராம நகரங்களின் தர்மச்சாவடிகளிற் றங்கும்படிவிட்டு, மகன் குறையிலாச் செல்வவாழ்க்கையில் காலங்கழித்தல் அநியாயமென அத்தேயங்களில்இகழ்வது சகஜமில்லாமலிருக்கின்றது. இதனைக்கண்ணுற்று வருகின்ற நம்மனோர் அவ்வழியிற் செல்லாதுநிற்றலே உசிதமாகுமெனுநம்பிக்கையுடன் நமக்குநெடுங்காலமாய் ஏற்பட்டுவரும் உயர் கொள்கை நடையுடைகளைக் கைவிடாதொழுகிவரல்வேண்டும். நமது பூர்விக ஸ்மிருதிகள் தந்தைகள் நியாயமாய் நடந்துவரவேண்டுமென்று அவர்கட்குசில நற்போதனை செய்யுமாறு கூறியிருக்கும் சில வசனங்களை, மிதாக்ஷரி, விபரீதமாய் சில வியாக்கியானங்களைச்செய்து, பிள்ளைகள் ஜனிப்பதாலேயே தந்தையின் சொத்துக்களில் சமானபாத்தியதையை தந்தையின் ஜீவகாலத்திலேயே கூட அடைந்துவிடுகின்றார்களெனக் கூறுவதாலேயே சட்டங்களில் இன்னூதன வேற்பாடு நுழைக்கப்பட்டுவிட்டது. இந்நாட்களில் இந்துசாதியாருள்ளும் பெற்றோர்க்குப் பணிவு முதலிய குறைந்துவருதற்கு மேலே சொல்லிய அசாஸ்திரீயமான விதிகளே காரணமாகின்றன. இப்படிப்பேசுவதால் இச்சட்ட நிபந்தனைகளில் உசிதமாக மாறுபாடுகள் என் ஜீவதசையில் இந்நாட்டில் ஏற்பட்டுவிடுமென நான் நம்புகின்றேனில்லை.

ஆயினும் சர். H. S. கவர் முதலிய நிகழுந் தலைமுறையைச்சேர்ந்த இளம்பருவமுடைய சட்ட நிபுணர்கள் செய்துவரும் பெரும் பிரயத்தினங்களால் அடுத்த தலை முறையிலாவது இவ்விதமான சுப மாறுதல்கள் நமது நாட்டில் நிலைபெறுமென நம்பிக்கையென் சித்தத்தில் குடிகொண்டிருக்கின்றது.

இனி யிரண்டாவது விஷயத்தை விளக்குவாம். இதுவே சிராத்தமெனப்படுவது. இவ்வித மாசத்திய வருஷாந்திய கர்மானுஷ்டானங்களின் முக்கிய வம்சங்கள் சிரத்தை, நம்பிக்கை முதலியனவாகும். அவைதான் யாவையெனின் அவையாவரை நோக்கிச் செய்யப்படுகின்றனவோ அம்முன்னோரிடம் அன்பும், அவ்வச்சடங்குகள் நிறைவேற்றவேண்டிய முறைகளின் அறிவுமேயாம். இவையிக்காலத்தவர் செய்யும் கடன்களின் பெரும்பாலும் காணப்படவில்லையெனவே சொல்லலாம். வட விந்தியாவிலும், ஆந்திர தேசத்தின் சில பாகங்களிலும் அமாவாசி தினங்களிற் செய்யவேண்டிய நீர்க்கடன் வழக்கிலில்லை என யானறிவேன். சர்வபித்ருகாலமாதத்தில் சிராத்தஞ் செய்யவேண்டிய வழக்கும் சிற்சிலரிடந்தவிர மற்றெங்கும் நின்றுவிட்டதன்றோ!



முன்னோர்களால் ஏற்பட்ட கடன்தொகைகளை, அக்கடன்கொடுத்தவர் நியாயஸ்தலத்தில் வழக்குத்தொடுத்துத் திருப்பிக் கேட்கும்பொழுது வார்சுகள் கொடுத்துத் தீர்க்காமல் அவற்றிற் காதாரமான ஆஸ்திகளைத் தாமனுபவித்துக்கொண்டே, சாஸ்திர திருஷ்டியில் மிகவும் விகாரமாய்த் தோன்றும் காலாவதி முதலிய பொய்வாதங்களைக்கொண்டு தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். வியாதிகளைத் தீர்ப்பதற்கென சிகித்ஸாஸ்தலம், சிறுவர்க்குக் கல்வி கற்பிக்கக் கலாசாலை, முதலிய நற்கருமங்கள் தந்தையால் ஆரம்பிக்கப்பட்டு முடிவடையாமல் போய்விடுமாயின், அவற்றை நிறைவேற்றுதலே பின்வந்த வர்சுதார்களின் கடமையென ஒப்புக்கொள்ளுவாரில்லை. இவ்வுயர் மனோரதங்களல்லது இச்சைகள் பூர்த்தியாகாவிடில், அவ்விச்சைக்கொண்டு இறந்த தாய் தந்தையர் இறந்தபின் புவர்லோகத்தின்வழி சுவர்க்கலோகம் போவதற் கிடைஞ்சலுற்று விழித்துக் கிடக்கிறார்கள் என்பதுண்மையன்றோ.

பிராமணர் என வெறும் பெயர்படைத்து நிற்கும் இக்காலத்தில் கருமானுஷ்டான சடங்குகளைச் செய்விப்போர், சூட்சும திருஷ்டியல்லது பரலோக திருஷ்டியில்லாராய், சிராத்தங்களைச்செய்வோரான சாமானியருக்கு, அவரவர் பெற்றோர் எவ்வுலகத்தில் எப்பிரதேசத்தில் தற்பொழுது வசிக்கின்றனரெனவும், சுவர்க்கலோகம்போய்ச் சேரும்வரை மூன்று தலைமுறை காலம் பித்ருகாரியங்களை யபேக்ஷித்து நிற்பவரான இவர் தற்பொழுது சுவர்க்கம் விட்டு மறு ஜனனமாகி பூவுலகத்திற்கு வந்து சேர்ந்தரெனவும் மூன்று தலைமுறைகள் சென்றபின்னரும் முன் பூவுலகி லிருந்தபொழுது செய்த விசேட பாவகர்மத்தால் இன்னும் புவர்லோகத்தின் தாழ்ந்த பாகங்களான நரகலோகத்தில் வசிப்பதால் அப்பாவங்களொழிந்து மேற்செல்லுமவண்ணம் தகுந்த விசேட காரியாதிகளைச் செய்து அவரைக் கரையேற்றலே வேண்டுமெனவும் இவ்வாறான வழிகளைக்காட்ட வியலாதவராகின்றனர். இப்பரலோக திருஷ்டியுள்ளவ

ரன்றோ மற்றவர்க்குச் சடங்குகளைச் செய்விக்கவல்ல புரோகிதர் எனும் பதவிக் குரியவராவர். ஆதலின் இக்கரும சடங்குகளெல்லாம் சாரமற்ற வெறுவேடக்கூத்துக்களே யாகிவிட்டன. பிதிருக்கள் யாவரும் தெய்வ வழிபாட்டிற்குறியவர்களன்று (கீதை 9-ம் அதிகாரம் 25-ம் பாட்டைப்பார்க்க.) இவ்விதம் பயனற்றவைகளாயினும், ஆசை, தம்பெருமையைக் கைவிடப்படாதெனும் நோக்கமிவையுள்ள பரம்பரையால் இவை நடத்தப்பட்டே வருகின்றன. இம்மயங்களில் உச்சரிக்கப்படும் மந்திரங்கள் அவற்றின் பொருளை யறிந்துகொள்ளாமலே உச்சரிக்கப்பட்டும், அவற்றின் பலன்களும் அளவுகடந்து சம்பவிக்குமென நம்பிக்கைகளும் யாவராலும் கொள்ளப்பட்டும், வருகின்றதென யாவர் தாம் அறியார்?

உதாரணமாக—ஒருவர் மரணமடைந்த 13ம் நாளில் வீட்டில் நடக்கும் கிருஹயக்ஞச் சடங்கில் இறந்தவர் மத்திமவுலகங்களியாவுங்கடந்து பிதிருலோகம் போய்ச் சேர்ந்த பிதிருக்களுடன் கலந்து நிற்கின்றனர் எனவும், சில புரோஹிதர்மாக்கள் இறந்தவர் மோக்ஷலோகம், சிவலோகம், வைகுண்டத்தை அடைந்துவிட்டனராதலின் மறுபடி ஜனனமடைவதில்லையெனவும், இறந்தவரின் புத்திர பந்துக்களிடமிருந்து அதிகமான சம்பாவனையடையலாமெனக் கூறிவிடுகின்றனர். இவ்விதம் பேசி யாவரும் சந்தோஷமடைந்த பின்னரும், வழக்கம்போலவே அப்பால் அவ்வுயர்பதவியை யடையாதவருக்கு நாம்செய்துவருவது போலவே, இவர்க்கு பிரதிமாதமும், பிரதிவருடமும் சடங்குகள் நடத்தப்பட்டே வருகின்றன. இறந்தவுடன் செய்யப்பட்ட 12 நாள்க்காரியங்களும் பிறகு அந்த வருட முழுவதும் செய்யப்பட்டு, அப்படியே மேற்சொன்ன கிருஹயக்ஞச் சடங்கும் பழையபடி வருடமுடிவில் நடத்தப்படுகின்றது. பிரதிவருடாந்தச் சிராத்தச்சடங்கிலும், கயாவில் நடத்தப்படும் சிராத்தத்தைப்போல் அதுபலமுள்ளதாகி விட்டதென புரோஹிதர்கள் புகழ்ச்சி செய்தலும், அதனை யாக்கியோனது முன்னோர்கள் சுவர்க்கமே சேர்ந்துவிட்டனர் எனவும், ஆதலின் இனிமேலவர்களுக்கு சிராத்தமே தேவையில்லாமற் போய்விட்டதெனவும் மொழிதலும் வழக்கமாய் நடந்துவருகின்றதைப்பாருங்கள். சிராத்தப் பிராமணர்கள் யாவரும் படிப்பிலிகளாயும், வேதத்தை யோதாதவர்களுமாகவே யிருக்கின்றனர். சமீபபந்துக்களுள் ஏழைகள் தக்ஷிணை அன்ன வஸ்திரங்களை யடையும்படி இக் காரியங்களில்



நியமிக்கப்படுதலும் சகஜமே. வித்தையற்ற பிராமணர்கள் சிராத்தகருமத்தில் ஏற்பட்டு எத்தனை கவளங்கள் ஆகாரத்தை யுட்கொள்ளுகின்றரோ அத்தனை பழுக்கக்காய்ச்சின இரும்புருண்டைகளை யஜமானனைச்சேர்ந்த பிதிருக்கள் விழுங்குகின்றனரென மனு கூறியிருக்கின்றனர். இவ்விதமுண்மையிருப்பினும் இவ்வகைப் பார்ப்பினரை வசிஷ்ட வாமதேவ ரிஷிகளுக்கு ஒப்பானவரெனப் புகழ்தலும் வழக்கமல்லவா. இவ்விதப் பெரும் புழுகுகளிலும், இப்படியே மேற்சொன்னபடி ஒரு சிராத்தகருமம் ஆனவுடனேயே பிதிருக்கள் சுவர்க்கம்சேர்ந்து விட்டனராதலின் அப்பால் அவருக்கு சிராத்தமே தேவையில்லை யெனக்கூறும் கூற்றுக்களிலும் எவரும் நம்பிக்கைகொள்வதைக் காண்கிலம். ஏனெனில் இச் சிராத்தகருமங்கள் மறுபடியும் அடிக்கடி செய்யப்பட்டு வருவதை எவரும் கண்கூடாய்க் காண்கின்றனரன்றோ! கயாவில் சிராத்தஞ் செய்யப்படவேண்டுமென்பது பிற்காலத்தவர் புராணாதிகளில் சேர்த்துக்கொண்ட கட்டுக்கதையேயென்பது என்கருத்து. ஏனெனில் கயாவாஸிகள் அப் பிரதேசத்தில் நடத்திவரும் அநீதிகளைக் கண்ணுற்ற வெறுப்புறாதார் யாவர்? இக் கயாவில் சிராத்தம் நடத்திக்கொண்டபிறகு பிரதிவருடமும் அதை நடத்தவேண்டாமென விட்டவர்களை யானிதுவரைக்கண்டதில்லை. மானிடரில் ஒவ்வொருவனையும் மற்றவர்கள் நாராயணன், மகாதேவன் இவர்களது ஸ்வரூபமென்றே கருதல்வேண்டுமென்பது சாஸ்திரத்தின் ஆக்ஞையேயாயினும், இஃது பாரமார்த்திகவுண்மையேயன்றி வியவஹாரத்தில் பொருத்தமுடையதன்றென்பதை எவரும் அறிவர். ஆதலின் அறிவிலியும், துர்நடத்தையுடையவனுமாய் நிற்கும், ஒருவனை தனக்குக் குரு, அல்லது புரோகிதன், அல்லது தன்பிதிருக்கள் நல்வழியடைய வழிகாட்டும் யோகி யல்லது ஞானி என எவனும் வேண்டுமெனத் தெரிந்தெடுத்துக்கொள்வல் உசிதமாகாது. ஆனால் பிறர் எத்தகையராயினும் அவரிடம் ஒருவர் வைக்கும் அன்பு வியர்த்தமாகாதென பெரியாரான ஸ்ரீமான் லெட்பீட்டர் அவர்கள் அடியில்வருமாறு கூறுகின்றனர்:—

"மிகவு முத்தமமான இவ்வன்பை அதற்கு உரியரல்லாதார் மட்டுச் செலுத்தினால் வியர்த்தம் அல்லது நஷ்டமாகி விடுமென்பதில்லை. அன்பென்பது ஓர் அழிவற்ற வஸ்துவேயாகும். நாம் எந்த நற்குணம் பிறரிடம் உளதென நம்புகின்றோமோ அஃது

அவரிடம் இப்பொழுதே பிரகாசமாய் விளங்குமாயின் நாம் வைக்கும் அன்பு அந்நற்குணத்தை யதிகமாய் அவரிடம் விளக்குவிக்கும். இந்நற்குணம் அவரிடமில்லாமலே யிருக்குமாயின், அப்பொழுது அவருள்ளிருந்து பிரகாசியாது அடங்கிநிற்கும் அக்குணத்தை வெளிக்கிளப்பி பிரகாசிக்கச்செய்ய நமது அன்புதவி புரிகின்றது. ஆகலின் நமது அன்பையும் ஆதரவையும் பிறரிடம் காட்டி வருதற்கு நீங்கள் யாவரும் பின்னிடைதல் கூடாது. நாம் அன்பு செலுத்தும் மனிதர் இப்பொழுதே அவ்வன்பிற்குரிய நற்குணங்களையுடையரல்லாவிடினும் இனிவருங்காலத்தில் அவ்வுயர் சீலங்களைக்காட்டியே தீருவர் என்பது திண்ணம்".

இவ்விதப் பிரமாணத்தால் நாம் ஏன் உபயோகமற்றவராயினும் சிலரைப் புரோகிதர் அல்லது குருவெனக்கொள்ளல் கூடாதென சிலர் வினவலாம். அதற்கு விடையளிப்பாம். மேற்கூறியபடி அன்பைச் செலுத்தவேண்டுமெனும் உபதேசம் எவ்விஷயத்திலெனின், ஒருதேவன், அல்லது மானிடன் ஒருவனை நோக்கி, மெத்தெனவோர் கைமாறும் கருதாது, நமதன்பிற்குரிய வஸ்துவின் அபிவிருத்தி யல்லது மஹிமையைக் கோறிச் செய்யப்படுவதும், அறிவிலா மூடரான மன்பதைகள் யோசனையற்றுச் செய்துவரும் மூடபக்தியாம் அன்பைக் குறிப்பதும் ஆமென்க. இனி இங்கு நாம் பேசும் விஷயமோ, நமது பிதுருக்களுக்கும் நமக்கும் பலனைத் தரும்படி, புரோஹிதன் அல்லது குரு ஒருவரது உதவியை நாடுதல் அல்லவா? ஆகலின் வழிதெரியாக் குருடனாகிய புரோஹிதன் ஒருவனைநம்பி பக்தி சிரத்தை கொள்ளல் மிகவும் பயனற்றதேயாகும். ஆகவே சுற்றத்தார், உலகினர் பலரும்சேர்ந்து செய்துவரும் ஏற்பாடுகளெனக் கருதி மேற்கூறியபடி உண்மையறியத் திறனற்ற அறிவிலா மாந்தரான குரு, புரோகிதர்மார்களை வெளிப்படையாக வேணும் நம்பும் வேஷந்தரித்தல் முற்றிலும் வீணேயாகும். ஆங்கில பாஷையில் பிரசித்த காவியத்தில் உலகியலை நன்குணர்ந்த அனுபவியுமான ஷேக்ஸ்பியர் சொல்லியிருக்கும் வண்ணம், "யாவருக்கு மடங்காப் பெரும் பிசாசமான பழவழக்க மென்பது காலக்கிரமத்தில் நமது அறிவையே விழுங்கிவிடுகின்றது" என்பதுண்மையே.

ஸ்தானம், மடம் முதலிய புரோஹித, குரு பதவிகளிலுள்ளார் இத்தேச சரித்திரத்தின் மத்தியகாலங்களில் தம் பெருமை வருமான மிவற்றை விருத்திபண்ணி பாரம்பரைதோறும் காப்



ற்றிவரும் பொருட்டு எழுதிப் பிரசாரப்படுத்தியிருக்கும் கதைகளில், மேலேசொல்லிய பதவி, ஸ்தானங்களில் வைக்கப்பட்டிருக்கும் குருமார்களை நம்பினோருக்கு, அக் குருமூர்த்திகள் எவ்வளவு அருகதையில்லாராய் விளங்கினும், கடவுளை யடைந்துவிடும் பாக்கியம் கிட்டுமென எழுதிவைத்திருக்கின்றது, காணப்படுகின்றன. இவை உபநிஷத்துக்களின் கருத்துக்கட்கு மாறுபடுகின்றன. முக்கியமான இரண்டு உபநிஷத்து வாக்கியங்கள் இதற்கு எதிர்மாறாய்ப்பேசுகின்றனர். குருட்டுத்தனமான குருவை நம்பிச் செல்லுவோர் குருடுங் குருடுங் குருட்டாட்டமாடிக் குழியில் விழுந்து புரளுவரேயன்றி அகத்தறிவிலாக் குருடரான குருமார் எவ்வாற்றானும் தம்மை நம்பின சீடர்களைக்கரையேற்றுதற்கு இயலார் என்பதுண்மையினு முண்மையே. யோகம், தீக்ஷை இவற்றின் முறைகொண்டு சூட்சுமவுலகங்களைத் தரிசனஞ்செய்யக் கற்றுணர்ந்து அவ்வுயருலகங்களில் சஞ்சரிக்கவும் அங்கு சுவாதீனமாய் காரியங்களைச் செய்யவும் வல்ல அறிவையும் சத்தியையுமடைந்தவரே குருமார் ஆவரன்றி, வெறும் பதவி, ஸ்தானம் இவற்றையடைந்தவரும், இப்படியுள்ள பூர்வீக பரம்பரை வழிவந்தவரும் எப்படி குருவாதற்குச் சாத்தியமாகும். விராட்புருஷனாகிய ஈசுவரனது வெளியுருவங்களே இந்நாட்களின் சந்தர்ப்ப சௌகரியங்கள், வெளியான நிலைமைகளாக மாறி நிற்கின்றன. ஆகலின் அவைகளுக்கேற்ப, வேதமந்திரங்களில் பொய் கலந்திருப்பதையெல்லாம் நீக்கி சாரத்தையெல்லாம் விளக்கி மேற்கூறிய பிதுருகாரியாதிகளில் அவசியமானபடி நூதன சீர்திருத்தங்களை நம் பாரதசமாஜமெனும் சபையே செய்துவருகின்றது.

கிருஷ்ணதாசன்.

---

# * பிரம்மஞானியின் சித்தவிர்த்தி.

## 1 மரணம். சூக்ஷ்மப் பிரபஞ்சம்.

பிரம்மஞான ஸபையைச் சேர்ந்தவனாக ஒருவன் ஆனமாத்திரத்தில், இதரர்களைவிட எவ்விதத்திலாகட்டும் விசேஷமானவனென எண்ணப்படாது. ஆனாலும், இந்த ஸபையின் கிரந்தங்

* 1926ம் ௵ டிஸம்பர் ௴ 25௳ காசிக்ஷேத்திரத்தில் ஸ்ரீமான் பிஷப் லேட்பீட்டரவர்கள் அளித்த உபன்யாச சங்கிரஹம். தெலுங்கு திவ்யஞான தீபிகையில் வெளியானதை அனுசரித்து பத்திராதிபரால் மொழி பெயர்க்கப் பட்டது.

களின் துவாரா சில புதிய ஞானம் விவரமாய் அவனுக்குத் தெரிய வருகின்றது. முக்கியமாய் ஐரோப்பாவில் இருந்த எங்களுக்கு, கேவலம் அபூர்வமான புதிய விக்ஞானம் இம்மூலமாய் லபித்தது. இங்கு (இந்தியாவில்) உள்ள உங்களுக்கு இவையெல்லாம் பழங்கதையாகவேயிருக்கும். பழங்கதையென்ற காரணத்தாலேயே அவையெல்லாம் மேகம் மூடினாற்போல் தெளிவுபடாதிருக்கினும் இருக்கலாம். புதிதாகக் கிடைத்தவர்களுக்கு இந்த ஞானம் விசேஷ ஜோதியாய்ப் பிரகாசிக்காமல் தீராது. இந்த ஸபையில் சேராததற்கு முன் நான் கிறிஸ்தவமத போதகன். அக்காரணம் பற்றி, மரணத்தின் துவாரா, பிரியமுள்ளவர்களின் பிரிதலையடைந்து, துக்கத்தில் ஆழ்ந்திருப்பவர்களுக்குக் கொஞ்சம் ஞானத்தைப் போதித்து அவர்களைத் தேற்றுதல் எனக்குக் கடமையாக இருக்க, யுக்தி யுக்தமாய் அவர்களின் மனதிற்கு திருப்தியை விளைவிக்கக்கூடிய சித்தாந்தம் எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஈசுவர இச்சை தவிர்க்கப்படாதவையென்றும், மரணாந்தரத்தில் ஜீவன் எங்கோ ஜோதிர்மயமான சூர்யலோகங்களுக்குச் சென்றிருக்கிறானென்றும், துக்கப்பட நிமித்தமில்லையென மாத்திரம் சொல்லக்கூடியதாய் ஏற்பட்டு இருந்ததேயொழிய, இது அவர்களுக்கு திருப்தியைக் கொடுக்கக்கூடிய அளவு யுக்தி யுக்தமாய் இல்லாது போவதுபற்றி, அவர்களுடைய மனதிற்குச் சமாதானத்தை யளிக்காது போயிற்று. ஸாமான்ய யுக்திகளால் இந்த சித்தாந்தங்களைக் கண்டித்துத் தொலைத்தாலோ சில கிரந்த கர்த்தாக்களின் எழுத்துக்களால் சமுசயங்களும் அவநம்பிக்கைகளும் வியாபித்திருந்தன. இவ்வித சமயத்தில் பிரம்மஞானம் வந்து கிறிஸ்தவ லோகத்திற்கு மிகவும் நலத்தைச்செய்தது. பிரம்மஞான ஸபையாருக்கும் இதரர்களுக்கும் இவ்விஷயத்தில் விசேஷபேதம் ஏற்பட்டது. ஆனால், இவ்விஷயங்கள் பிரம்மஞான ஸபையார்கள் கூட "அறிவோம்" எனச்சொல்லுதல் சாத்தியமா? என்றும் கேள்வி வரலாம். இதர மதக் கிரந்தங்களினின்றும், சாஸ்திரங்களினின்றும் தெரிந்துகொண்டதாக மேடாம் பிளாவட்ஸ்கி முதலாயுள்ளவர்களின் கிரந்தங்களினின்று தெரிந்துகொண்ட விஷயங்களேயன்றோ! ஆனால் இந்தஞானம் இப்பொழுதும் ஸ்தூல சரீரதாரிகளாயுள்ள ரிஷிகளிடமிருந்து, அவர்களது ஸ்வசிஷ்யர்கள் மூலமாய் வந்தது. மேலும் இந்த ஞானம் இக்காலத்திற்குத் தக்கபடி யுக்தியோடு கூடினதாய் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பிரதிநிதியும்,



அவர்களது தூதையுமான பிளாவட்ஸ்கி அம்மையார் மூலமாயும், மஹான்களான ரிஷிகளுக்கு அனுப்பப்பட்ட பிரச்னைகளுக்கு விடைகளாகவந்த கடிதங்கள் மூலமாயும் இந்த ஞானம் லபித்தது. அம் மஹான்களில் ஒருவர் பின் வருமாறு கூறியிருக்கின்றார். "நாங்கள் சொல்லும் சொற்களில் திருப்தியடையாதீர்கள். எங்கள் வாக்கியங்களை நன்றாய் ஆலோசியுங்கள், ஆராய்ச்சிசெய்யுங்கள். எங்களுக்கு இந்தஞானம் பிரத்யக்ஷம். எங்களிடம் ஜீவாத்ம சக்திகள் விகசித்திருப்பதால் நாங்களறிவோம். நீங்களும் அவ்வாறே செய்யவேண்டுமென்பது எங்கள் கோரிக்கை". 'நாங்களறிவோம்' என்பதற்கும் 'நாங்கள் நம்புவோம்' என்பதற்கும் உள்ள தாரதம்யத்தை நன்றாய்த்தெரிந்து கொள்ளுங்கள். யுக்தியோடு கூடினதாய் இருந்தாலும், நம்புவதற்குவேண்டிய அளவுபலமான ருசுப்பிரமாணங்கள் இருக்கும்பொழுதும் நம்பலாம். பௌதிக சாஸ்திரமார்க்கத்தைப்பாருங்கள். எவ்விஷயமாகட்டும், கண்ணை மூடிக்கொண்டு நம்பார்கள். (மாத்திரையை விழுங்குவதுபோல் விழுங்கமாட்டார்கள்.) தெரியும் விஷயம் யுக்திக்குப் பொருத்தமாயிருக்கின்றதா? கார்ய காரணஸம்பந்தம் ஒத்து இருக்கின்றதா? காணப்படும் விஷயங்களையெல்லாம் சேர்க்கின் இவை யின்னவை, இவை யின்னவையென சித்தாந்தப்படுத்துவதற்கு யோக்கியமாய் இருக்கின்றனவா? என விமர்சித்து முடிவில் சித்தாந்தமாக அங்கீகரிப்பார்கள். இவ்விஷயத்தில்கூட, ஒரு ஜன்மத்தினின்று மற்றொரு ஜன்மத்திற்குக் கொண்டுபோவதற்குள்ள ஸம்பந்தம் யுக்தியோடு கூடினதாயிருக்கிறதாவெனத் தெரிந்துகொள்ளவேண்டும். ஒன்றின் பின் ஒன்று வரும் வெகுஜன்மங்களில், ஜீவாத்மசக்திகள் கிரமக்கிரமமாய் விகசித்துக் கொண்டிருக்கவேண்டும். அந்தரங்க ஆத்மசக்திகள், அதாவது சித்திகள் இருக்கின்றனவென்பது நிச்சயம். அதற்கு வேண்டியஅளவு பிரத்யக்ஷப் பிரமாணங்களுள, அந்த சித்திகளால் ரகசியமாயுள்ள சிலதத்வங்கள் பிரத்யக்ஷ அனுபவத்தில் அறியக்கடவோம். அதன்மூலமாய், தற்காலத்திற்கு அனுபவாதீதங்களாயுள்ள இதரதத்துவ மர்மங்கள் கூட யதார்த்தமானவைகளாகவே இருக்கலாமெனவும், காலானுஸாரமாய் அவைகளும் பிரத்யக்ஷ அனுபவங்களாய் ஆகக்கூடுமென்றும் தைரியமும் நம்பிக்கையும் ஜனிக்காமல் தீராது.

இவ்விதம் தினந்தினம் ஒரு புதுவிஷயம் என் அனுபவத்திற்கு வந்துகொண்டிருக்கின்றது. ஆனதுபற்றியே இப்பொழுது

80 வயதில், நான் உங்கள் எதிரில்நின்று, புலப்படாத ஸூக்ஷ்மப் பிரபஞ்சத்தைக்குறித்து எனது ஸ்வானுபவத்தை உங்களுக்குப் பிரமாணமாக அளிப்பதற்கு மேற்கொண்டேன். இன்னும் எனக்குப் பிரத்யக்ஷமாய்த் தெரியாத விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அது குறைவாகமாட்டாது. அவைகள் நமது தினசரிதைகளுக்கு ஸம்பந்தப்பட்டவையன்று. நமது தினசரிதைக்கு மிகவும் பிரயோஜனமுள்ளவைகளாயுள்ள தத்துவங்களிருக்கின்றன. அவைகளைக்குறித்து இந்தக் கன்வென்ஷன் உபன்யாசங்களில் ஆராய்வோம். இப்பொழுது இந்ததினம் எனது உபன்யாச விஷயம் (1) மரணம், அதற்கப்பால் (2) புலப்படாத பிரபஞ்சம் (ஸ்தூல நேத்திரங்களுக்குப் புலப்படாதவை). சூக்ஷ்மதிருஷ்டி நம்மில் ஒவ்வொருவருக்கும் கிஞ்சிற்றேனும் ஏற்பட்டேயிருக்கின்றது. சூக்ஷ்மப் பிரபஞ்சம் இருக்கின்றதென ஊஹிக்கவேண்டிய மாத்திர மிருக்கின்றது.

(1) மரணம். ஜீவித மரணங்களைக்குறித்து மிகவும் தெளிவான சித்தாந்தத்தையுடைய இதார்களுடைய மனோபாவங்களே பிரம்மஞானியின் மனோபாவங்கள். இவ்விஷயத்தில் பிரம்மஞான ஸபைக்குச் சம்பந்தப்பட்டவர்களாலே எழுதப்பட்ட கிரந்தங்கள் விசேஷம் உள. புரொபஸர் மையர்ஸ் என்பவரால் அரிய நூல் "மானிட தத்வம் மரணாந்தர ஜீவிதம்" என்னும் கிரந்தமொன்றுண்டு. அக் கிரந்தகர்த்தா பிரம்மஞானஸங்கத்தில் சேர்ந்திருந்து, பிளாவட்ஸ்கி அம்மாளிடம் இவ்விஷயமாய் விசேஷம் கற்றுக்கொண்டு இருந்தாரே ஒழிய, சங்கத்திற்குச் சில கஷ்டங்கள் நேர்ந்து, ஜன அபிமானம் கொஞ்சம் குறையவே, ஸங்கத்தை விட்டு விலகினார். மற்றொரு பௌதிக சாஸ்திரி, மரணாந்தரம் ஜீவர்கள் ஸ்தூலதிருஷ்டிக்குப் புலப்படக்கூடிய ரூபங்களைத் தரித்துக் காணப்படுவதைக் குறித்து மிகவும் பரிசீலனைசெய்து, விசேஷ சாக்ஷியங்களைச் சேகரித்து, ஸூக்ஷ்மப் பிரபஞ்சமிருக்கிறதென ஸ்தாபித்தார். ஆனால் இக்கிரந்தகர்த்தாக்களெல்லாம், மரணாந்தரத்தில் ஜீவன் தென்படாமல் இருக்கிறானென ஸ்தாபிப்பார்களேயொழிய, பிரம்மஞானசங்கத்தாரின் சித்தாந்தத்தை மாத்திரம் கிரஹிப்பதற்குப் பின்வாங்குகின்றார்கள். ஆனாலும் அதைவிட சிரேஷ்டமும், விசேஷ யுக்தியோடு கூடியதாயுமுள்ள மற்றொரு சித்தாந்தம் எவரேனும் நிர்த்தாரணம் செய்ததாகக் காணோம்.



நாங்கள் மரணத்தைக்குறித்துச் சொல்வதென்னவெனின், மரணமே மனிதனுக்கு முடிவா? என்னும் பிரச்னைக்குத் தெளிவாய் "அல்லவே யல்ல ஜீவனுடைய நீண்ட யாத்திரையில் மீளவும் மீளவும் சம்பவிக்கும் ஒரு சுவல்ப அனுபவம் மரணம்" என எங்கள் சித்தாந்தம். அதை நீங்கள் எப்படி அறிவீர்களென்கிறீர்களோ? எனது பூர்வஜன்மங்கள், ஜீவிதங்கள் எனக்கு ஸ்பஷ்டமாய் ஞாபகமிருக்கின்றன. எனது நினைவு உங்களுக்குப் பிரத்தியக்ஷ பிரமாணமாகாமல் போகக்கூடுமேயொழிய, அதிக பலமான ஸாட்சியமாகாமல் தீராது. "புனர்ஜன்மம்" என்னும் பெயரால் டாக்டர் பெஸண்டம்மாள் அவர்கள் பிரசுரஞ்செய்த கிரந்தத்தில் இவ்விஷயமாய் விசேஷ விவரங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

மனிதன் மரணமடைந்தவுடனே நக்ஷத்திரமண்டலத்தைக் கடந்து எங்கேயோ போவதில்லை. நிலையற்ற ஸ்தூலசரீரத்தை விட்டு, கண்ணுக்குப் புலப்படாத ஸூக்ஷ்ம சரீரத்தை அடைந்திருக்கின்றான். ஜீவன் ஸ்வயமாகவே விக்ஞானமய கோசத்தினின்று, கீழ் உலகங்களுக்கு ஸம்பந்தப்பட்ட, மனோமய, காமமய, அன்னமய மென்னும் உபாதிகளை உடைத்தாயிருக்கிறான். சங்கற்பங்களுக்கு ஸ்தானம் மனோமய சரீரம். காமக்குரோதாதிகளுக்கும் ஆசாபாசங்களுக்கும் பலவித மனோபாவ விகாரங்களுக்கும் இருப்பிடம் காமமய சரீரம் (அப்பு தத்துவமயம்). பூலோக வியவஹாரங்களுக்கு ஆதாரம் ஸ்தூலசரீரம். ஜீவன் ஜன்மத்திற்குத் திரும்புங்காலையில் முதல் முதல் சுவர்க்கலோக ஸம்பந்தமான மனோமயகோசத்தையடைந்து, மற்றொரு படி யிறங்கவே புவர்லோகப் பிரகிருதிமயமாயுள்ள காமமய சரீரத்தைப்பெற்று, கர்ம தேவதைகளின் சோதனைகளை யனுசரித்து தேசகால பரிஸ்திதிகளுக் குட்பட்டு ஸ்தூலசரீரத்தைத் தரித்து பூலோகத்தில் ஜனிப்பான். பூலோகத்தில் ஜீவயாத்திரை சிறிதுகாலம் நிகழவே, ஜீவன் பின்னுக்குத் திரும்பிப் போகுதலே மரணம். மரணத்திற்கு அப்பாலுள்ள யாத்திரை முதல் முதல் தடித்ததாயுள்ள ஸ்தூலசரீரத்தை விடுவான். அப்பொழுது பூலோகஸம்பந்தம் நழுவி, ஏனைய இரண்டு உபாதிகளுடன் புவர்லோகத்திலிருப்பான். சிறிதுகாலம் கடந்தபின்னர் அவ்விரண்டில் ஸ்தூலமாயுள்ள காமமயசரீரம் ஜீர்ணித்து சிதிலமாகப் போகும். அப்பால் ஜீவனுக்கு சுவர்க்கலோக உபாதியான மனோமய சரீரமே மிகுந்திருக்கும். இது தைஜஸம்.

அந்த ஸ்திதியில் சுவர்க்கத்திலிருப்பான். மேலும் கொஞ்சகாலத்திற்கப்பால் அதுவும் நழுவிப்போய், ஜீவன் ஸ்வஸ்தானத்தையடைந்து, அங்கு சிறிதுகாலமிருந்து, பூர்வ அனேகஜன்ம ஸம்ஸ்காரரூபமாயுள்ள திருஷ்டியால் மீளவும் ஜன்மத்திற்காக பஹிர்முகனாகி மேல்சக்கரத்தையே அநுசரிப்பான். பள்ளிக்கூடத்திற்குச் சென்ற மாணாக்கன் ஒரு பகல் பாடத்தைப் படித்துக்கொண்டு, இரவு சொந்த வீட்டையடைந்து அப்பாடங்களை ஞாபகத்திற்குக் கொண்டுவந்து மனப்பாடங்களாகச் செய்துகொண்டு மறுதினம் புதுப் பாடங்களைக் கற்க மீளவும் பாடசாலைக்குப் போகும் மாதிரி, ஜீவனது பூலோகயாத்திரை. பாடசாலையில் ஓர் பகலைப்போலொத்தது. மரணாந்தர ஸ்திதி இரவைப்போலொத்தது.

ஸாமான்யமாய் மனிதர்கள் ஸ்தூலசரீர திருஷ்டியால் பார்த்து ஸம்பாதித்தலும் அநுபவித்தலுமே ஜீவியத்தின் உத்தேசமாகப் பாவிப்பார்கள். அது சரியன்று. உண்மையாய் ஜீவிய விஷயத்தில் மஹா உத்தமமான தென்னவெனின், நசிப்பதான ஸ்தூல ஸூக்ஷ்ம அபிமான திருஷ்டியை ஒழித்து, அழியாததான ஜீவனுடைய திருஷ்டியை அபிவிருத்தி செய்துகொண்டு, ஜீவனது நீண்ட யாத்திரையில் நித்தியனான ஜீவனது சாசுவத ஆன்மவிகாசத்திற்குச் சாதனங்களாயுள்ள அநுபவ ஞானங்களை அடைதலேயாம்.

மரணகாலத்தில் ஒரு கோசத்தை விட்டமாத்திரத்தில் ஜீவனது சுகுண துர்க்குண ஸம்பத்தி அவனை விடாது. ஜீவனை ஒட்டியேயிருக்கும். அனேகங்களான ஜனனங்களும் மரணங்களும்— எல்லாம் நிரந்தர ஜீவாத்மா விகாசத்திற்கே அன்றோ! இஹலோகத்தில் சில அநுபவங்கள், அவைகளின் துவாரா சில ஞானம் ஜீவனுக்கு வேண்டும். அந்த ஞானம் பூர்த்தியாக லபிக்கின் மீளவும் இந்த பூலோகத்தில் ஜனிக்க அவசியமில்லை.

இங்கு மேலே சுருக்கமாய்க் காட்டப்பட்ட விஷயங்கள் மிகவும் பிரயோஜனமுள்ளவைகள் :—

1. மரணத்தால் பிரியர்கள் வியோகம் ஏற்பட்டு துக்கத்தில் மூழ்கியவர்களுக்கு மேற்கூறிய விஷயங்களை தெரிவிப்பதின் மூலமாய், அவர்களுக்கு யதார்த்தமாய்த் துக்கத்தைத் தணிக்கக்கூடியவர்களாவோம். வாஸ்தவத்தில் நமது பிரியன் எங்கும் சென்று



தமிழ்நாடு 21812

போகவில்லை. நமது ஸ்தூலதிருஷ்டிக்குக் காணப்படவில்லையேயொழிய, நமது பக்கத்திலேயே இருக்கிறான். நித்திரைகாலத்தில் நாம் கூட ஸ்தூலசரீரத்தினின்று வெளிப்பட்டு ஸூக்ஷ்மசரீரத்தினிடமாக இருப்போமாகையால் அக்காலத்தில் நமது பிரிய மித்திரர்களை ஸூக்ஷ்மலோகத்தில் கலந்துறவாடுவோம். அவர்களுடன் சம்பாஷிப்போம். ஆனால் அங்கு நிகழ்ந்த ஸம்பாஷணை முதலியவைகள் மீளவும் ஜாக்கிரதாவஸ்தையில் நமக்கு ஞாபகமிருப்பதில்லை. ஏனெனில், ஸ்வப்னாவஸ்தையில் ஸூக்ஷ்மசரீர அநுபவங்களை ஜாக்கிரதாவஸ்தையில் ஸ்தூலசரீர சம்பந்தமான பஹிர்பிரக்ஞைக்குக் கொண்டுவருவதற்கு அவ்விரு உபாதிகளுக்கு மத்தியிலுள்ள நுட்பமான ஸம்பந்தம் யோகாப்பியாசத்தால் ஸ்திரப்படல் வேண்டும். அது ஆகாதவரைக்கும் ஞாபகம் வரா. சாமான்ய ஜனங்களுக்கு சுவல்பமாய் உண்டாகும் ஸ்வப்னங்கள் ஸூக்ஷ்மசரீர அநுபவம்; இவைகள் பூர்த்திக் குறைவாய் நினைவுக்கு வருதலேயாகும்.

ஆகையால் மரணத்தில் அவ்வளவு பயத்திற்குக் காரணமில்லை. ஜீவயாத்திரையில் ஸர்வ சாமான்யமாயுள்ள அநுபவம், இதற்குமுன் எத்தனையோ தடவைகள் அநுபவித்திருக்கின்றோம். அந்தந்தக் காலங்களில் இப்போதைய ஸ்தூலசரீரம் இருந்திருக்கவில்லையாதலால் இப்பொழுது ஜாக்கிரதாவஸ்தையில் அவை ஞாபகமில்லை. இப்பொழுதேனும் எவனாகிலும் விக்ஞானமயகோசத்தில் பிரக்ஞை உடையவனாயிருப்பனேயாமாகில் கடந்த ஜன்ம அநுபவங்களெல்லாம் அவனுக்கு ஞாபகத்திற்கு வரும்.

ஓர் முஸல்மான்யோகி பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

“நான் கல்லாக இருந்து, மரணமடைந்து விருக்ஷமானேன்.
விருக்ஷமாக மரணமடைந்து நான் ஜந்துவானேன்.
ஜந்துவாக மரணமடைந்து மானிடனானேன்.
இவ்வித மரணத்தால் எனக்குண்டான நஷ்டமென்ன?

இப்பொழுது மனிதனாக மரணமடைந்து தேவனாக ஆகக்கடவேன்”. ஆனால் ஒவ்வொருபடியிலும் அனேக காலம் நிகழும். ஆகையால் தத்துவத்தை மாத்திரம் கிரஹிக்கின் அது பெரிய ஸத்தியம்.

ஒவ்வொரு ஜன்மமும், அந்த ஜன்மானுபவங்கள் சுகங்களாக இருக்கினும், துக்கம் நிறைந்தவைகளாயிருக்கினும், எல்லாம் ஞான சாதனங்களாவதால், அதன் முன் ஜன்மத்தைவிட மேலானதென அறியக்கடவது. இந்த ஞானம் மரணத்தைக்குறித்த பயத்தைத் தலையெடுக்கவொட்டா தடக்கும்.

பிராணனுக்குச் சமானமாயுள்ள பிரியர்கள் நம்மைவிட்டுப் போய்விட்டார்களன்றோ! இனி அவர்களைப் பார்ப்போமா? என்பார்கள். வாஸ்தவமே. அவர்களை இந்த ஸ்தூலசரீரத்தால் பார்க்கமாட்டோம். அந்த சந்தோஷம் இனியில்லை. ஆனால் இவ்விதம் நினைத்தலும், துக்கித்தலும் கேவலம் ஸ்வலாபாபேக்ஷையே யன்றோ! இந்த துக்கம் எப்படிப்பட்டதெனின் புத்திரன் சொந்தவீட்டைவிட்டு, சொந்த கிராமத்தில் கிடைக்கக்கூடாத வித்தைக்காக வேறொரு பட்டணத்தில் ஸர்வகலாசாலையில் படிக்கப்போக, தகப்பன் புத்திரனது பிரிதலுக்காக துக்கிப்பதைப்போலொத்தது. அங்கு செல்லுதல் புத்திரனது க்ஷேமத்திற்காகவே யெனத் தெரியுமன்றோ! அவ்விதமே இந்த லோகத்தில் அந்த ஜீவன் அடைய சாத்தியமில்லாத அனுபவங்களை யடைந்து, பரிபக்குவம் ஆக வேண்டியிருக்க, இந்த வீட்டைவிட்டு அந்த வீட்டிற்குச் சென்ற ஜீவனைக் குறித்து சோகித்தல் அக்ஞானமன்றோ!

இவ்விதம் நினைத்தல் மானிட ஸ்வபாவம் அன்றென நீங்கள் சொல்வீர்கள். ஆனால் நாம் சாமான்ய பாமரஜனங்களன்று, அல்லா? பிரம்மவித்யா அப்பியாசிகளன்றோ! ஸாமான்ய ஜனங்கள் நடிக்கும் மார்க்கத்தினின்று நழுவி அதைவிட உன்னத படியில் நடக்க நிச்சயித்தவர்களன்றோ! ஜீவனுடைய உபயோகார்த்தம், நமக்கு ஸ்தூலசரீரங்கள் வந்தன. அப்பிரயோஜனம் முடிந்தவுடனே, அந்த சரீரம் போகும். ஆனதுபற்றி ஆத்மஹத்தி செய்துகொள்வது ஈசுவர இச்சைக்கு முரணானது. சரீரத்தை நன்றாய் ரக்ஷித்தல்வேண்டும். நமது ஸ்வப்பிரயோஜனத்திற்கன்றல்லவா! அக்கம்பக்கத்தார்களுடைய தொண்டிற்கே. சரீரத்தை மிகவும் பூரண ஆரோக்கியஸ்திதியில் வைத்துக்கொள்ளல் மிக்க தர்மம். அவ்விதம் சொன்னமாத்திரத்தில், ஸதா தன் சரீர சுகங்களையே யோஜித்துக்கொண்டு, சரீரபோஷணையிலேயே மூழ்கிப் போகவேண்டுமென்ற கருத்தன்று.



# II அதிருசிய லோகம்.

சாமான்ய ஜனங்கள் கண்ணுக்குப் புலப்படாத லோகமும் கூட இருக்கிறதென நினையார்கள். அவர்களின் ஜீவிதமெல்லாம் அவ்விதலோகம் இல்லையென்ற பாவத்தாலேயே நடத்தப்படும். இந்த தேசத்தில் உங்கள் ஜீவிதம், முக்கியமாய் பிராஹ்மணருடைய ஜீவிதமெல்லாம் அவ்வித புலப்படாத லோகமிருக்கிறதெனும் பாவத்தையே யனுசரித்திருக்கிறது. ஸ்நானம், அஹம்பு[illegible] சௌசம், மனோவாக்காய சுத்தி இவையெல்லாம் ஒவ்வொருவருக்கும் விதிக்கப்பட்ட தர்மங்கள். இவை விடத்தகாதவைகள். ஆனாலும், உங்களில்கூட சிலர், ஸூக்ஷ்ம ப்பிரபஞ்சஞானமே இல்லா[illegible] மூடர்களைப்போலவே தற்காலத்திற்கு மாத்திரம் ஜீவிப்பதாய் பிரவர்த்தித்திருத்தல் இழிவானவை, நம்மைச்சூழ்ந்து கவர்ந்துகொண்டு அனந்தமாயுள்ள அதிருசியப் பிரபஞ்சமிருக்கிறதென நாம் கற்றுக்கொண்டிருக்கிறோம். இப்பூலோகத்தில் மனிதன் உத்[illegible] ஸத்துவமாய் இருக்கக்கூடுமேயொழிய, மனிதனைவிட அதிக விசேஷம் வாய்ந்தவர்களாகி, நிகரற்ற தேஜோரூபர்களாயுள்ள தேவர்கள், தேவகணங்கள் சங்கியைக் கடங்காதவர்கள் இருக்கிறார்களன்றோ! இப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்களென நாம் கிரஹித்த மாத்திரத்தில் நமது ஜீவிதம் எவ்விதம் மாறுமென்பதை யோஜிப்போம்.

(இன்னும் வரும்.)

---

# பிரமாண வாக்கியங்கள்.

10. 𑌦𑍇𑌵𑌾𑌪𑌿𑌃𑌶𑌂𑌤𑌨𑍋𑌰𑍍𑌭𑍍𑌰𑌾𑌤𑌾𑌮𑌰𑍁𑌶𑍍𑌚𑍇𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑍁𑌵𑌂𑌶𑌜𑌃 ।
𑌕𑌲𑌾𑌪𑌗𑍍𑌰𑌾𑌮 𑌆𑌸𑌾𑌤𑍇 𑌮𑌹𑌾𑌯𑍋𑌗 𑌬𑌲𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑍌 ॥
𑌤𑌾𑌵𑌿𑌹𑍈𑌤𑍍𑌯𑌕𑌲𑍇𑌰𑌨𑍍𑌤𑍇𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌨𑍁𑌶𑌿𑌕𑍍𑌷𑌿𑌤𑍌 ।
𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌯𑍁𑌤𑌂 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌥𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑌃 ॥

சந்தனு என்பவரின் சகோதரராகிய தேவாபி என்பவரும் இக்ஷ்வாகு வம்சத்தில் தோன்றினவராகிய மரு என்பவரும் மகா யோகபலத்தை யுடையவர்களாய் கலாபம் என்னும் கிராமத்தில்

இப்பொழுது வாசம் பண்ணிக்கொண் டிருக்கிறார்கள். அவ்விருவரும் கலியின் முடிவில் ஸ்ரீ வாசுதேவராலே ஏவப்பட்டு வர்ணாசிரம தர்மங்களை, பூர்வத்தில் இருந்ததுபோலவே மறுபடியும் நிலைநிறுத்துவார்கள்.

—ஸ்ரீமத் பாகவதம்.

11. தேவாபி: பௌரவோ ராஜா மருஶ்சேக்ஷ்வாகுவம்ஶஜ: ।
மஹாயோகபலோபேதௌ கலாபக்ராமஸம்ஶ்ரயௌ ॥
க்ருதேயுகே இஹாகத்ய க்ஷத்ரப்ராவர்தகௌ ஹி தௌ ।
பவிஷ்யத: மநோர்வம்ஶபீஜபூதௌ வ்யவஸ்திதௌ ॥

புரு வம்சத்தரான தேவாபியும் இக்ஷ்வாகு வம்சத்தரான மரு இராஜாவும், இவ்விருவரும் மஹத்தான யோக பலத்தைக் கொண்டு கலாபக் கிராமத்தில் யார்க்குந் தெரியாமல் இருப்பவர்களாய், வருங் கிருதயுகத்தில் இங்கே வந்து க்ஷத்திரிய வம்சத்தைப் பிரவர்த்திப்பிப்பார்கள். இவர்களே உண்டாகு மனுகுலத்திற்கு விதையாக ஏற்படுத்தப்பட்டவர்கள்.

—விஷ்ணுபுராணம்.

12. ப்ரவ்ருத்தே து ததஸ்தஸ்மிந் தத: க்ருதயுகே து வை ।
உத்பந்நா: கலிஶிஷ்டேஷு கார்தயுக்யா: ப்ரஜாஸ்ததா ॥
திஷ்டந்தி சேஹ யே ஸித்தா அத்ருஷ்டா விசரந்தி ச ।
ஸஹ ஸப்தர்ஷிபிர்யே ச தத்ர தே வ்யவஸ்திதா: ॥
ப்ரஹ்மக்ஷத்ரவிஶ: ஶூத்ரா: பீஜார்தம் யே ஸ்ம்ருதா இஹ ।
கலிஜை: ஸஹ தே ஸர்வே நிர்விஶேஷாஸ்ததாபவந் ॥

வர்ண சங்கரம் அல்லது ஜாதி மயக்கமானது எவ்வளவு அதிகமாய் ஆகக்கூடுமோ அவ்வளவு அதிகமாய், உயர்தரமான முனையில் வந்துநிற்கும்பொழுது, கிருத யுகத்துமனு குலத்திற்கு(மனித இராசிக்கு) விதை சேகரிக்குந் தொழில் ஆவக்கப்படும், அதற்கு விதையானது, சித்தர்கள் மநுக்கள் துணையைக் கொண்டு, கலியுகத்தில் பக்குவமடைந்திருக்கும் ஆன்மாக்களிலிருந்து தெரிந்தெடுக்கப்படும். சப்தரிஷிகள் தங்கள் தொழிலைச் சாமானியமான ஜனங்களின் திருஷ்டிக்குப் படாமல் நடத்தி வருவார்கள்.

—மத்ஸ்ய புராணம், வாயு புராணம்.

(இன்னும் வரும்.)



26வ கீழே யிருக்கப்பட்ட தன்னினத்தார்களிடமிருந்து தன்னை வேறுபடுத்தும் சுவர்களை இடிப்பதாகிய ஒரு வழி தான் கோவிலை மூடியிருக்கும் கதவுகளைத் திறக்கும் வழி—வெளிப் பிரகாரத்தில் ஜீவாத்மா கற்றுக்கொள்ளும் பாடங்களில் இது ஒன்று.

வெளிப் பிரகாரம்.

27வ திரஸ்கரிக்கப் பட்டவனும், எளியவனும், நம்பிக்கையற்றவனும், தாழ்த்தப்பட்டவனும் இவர்கள் வேற்றுமை பாவமன்னியில் தன்னிடம் வரும்படி செய்வது பூர்ணம் பெற்றவர்களுடைய உபதேசக் குறிப்புகளில் ஒன்று. அருவருக்கப்படாத அவர்கள் பெற்றுக்கொள்ளும் பச்சாதாபத்தை உணர்கிறார்கள். அவனிடமிருந்து பக்ஷமானது பிரகாசிக்கிறது. அறிந்துகொள்ளும் அன்பு அவனைச் சுற்றிலும் பரவுகிறது. உண்மையில் அவன் பூர்ணஸ்திதியை அடைந்து வருகிறான் என்பதை அக்ஞானிகள் அறியமாட்டார்கள். உயர்த்தும் சக்தியையும் உயிர்ப்பிக்கும் உயிரையும் அவனுடைய ஸந்நதியில் புது சக்தியையும் புது நம்பிக்கையையும் அவர்கள் ஸ்வாசிப்பதாக உணர்கிறார்கள்.

குருநாதர்கள்.

28வ அக்ஞானத்தில் மூழ்கி யிருக்கும் லக்ஷக் கணக்கான நமது சகோதரர்களையும், நம்முடைய வருத்தங்களாலும் போராட்டத்தாலும் தியாகத்தாலும் ஏற்படும் உயர்வான சக்திகளைப் பற்றியும் நாம் நினைப்போமாக. அவர்கள் தெளிவடைய ஒரு படி உயர்த்தியும், அவர்களுடைய வருத்தங்களை ஆற்றியும், அவர்களுடைய அக்ஞானத்தைக் குறைத்தும், தெளிவும் உயிர்வாழ்த் தன்மையுமான க்ஞானத்தை ஞான வழியில் செல்ல அவர்களுக்கு ஒரு பாலமாய் ஏற்படவும் ஆவோம். ஒன்றும் தெரியாதவர்களுக்காக ஸ்வல்ப அறிவை அடைந்த நம்மவர்களில் யார்தான் தியாகம் செய்து கொள்ளாமலிருப்பார்?

பூர்ணமடைந்த மனிதன்.

29வ. நாம் எல்லோரும் துர்ப்பலமுள்ளவர்கள். நம்முடைய பலம் அற்பமானது. நம்முடைய புத்தி குறுகியது. நேசிக்கிறதும் தன்னை தியாகம் செய்துகொள்வதுமான ஹிருதயம் சொல்லுகிறதாவது, "உதவி செய்ய நான் இங்கே இருக்கிறேன். எவ்வளவு ஸ்வல்பமாகிலும் நான் உதவி செய்வேன். மனிதனுக்கு உங்களுடைய உதவிபோய் அடையும்படியாக நான் ஒரு வாய்க்காலாய் ஏற்படட்டும்." அப்படிப்பட்ட ஹிருதயம் ஒருக்காலும் தள்ளுபடி செய்யப்படுகிறதில்லை. அப்படிப்பட்டவனுக்கு வரும் பதிலானது "மனித வர்க்கத்திற்காக எங்களுடன் உழை. உழைப்பில் பங்கிட்டுக்கொள். காரிய பூர்த்தியின் கீர்த்தியிலும் பங்கிட்டுக்கொள்; எங்களுடன் கூட வா; மனித வர்க்கத்தை உயர்த்துவதற்காக நாம் எல்லோரும் சேர்ந்து உழைப்போம்.'

மானவ ரக்ஷகர்கள்.

---

## மார்ச்சு மாதம்.

## தியாகம்.

1வ. சிஷ்யனுடைய ஹிருதயமே ஓர் வேதிகை, அவனது பகவத் பக்தியே அவ்வேதிகைமீது ஜ்வலிக்கும் அக்னி; அவனது காயிக மானஸீக கர்மங்களெல்லாம் அந்த யக்ஞ வேதிகையில் ஹோமம் பண்ணப்படும் ஆஹுதிகள்; அவைகளை அவன் ஒருதரம் ஸமர்ப்பித்த பின்னர், திரும்பவும் அவனுக்கு அவற்றோடு யாதொரு ஸம்பந்தமுமில்லை.

பகவத்கீதையின் முகவுரை.

2வ. மனிதனுடைய நிஜஸ்வரூபம் சிதாத்மா. அந்த நோக்கத்துடன் பார்க்கின், இதரர்களுடைய ஸேவார்த்தமாக ஒருவன் தன் தற்கால போகத்தை த்யஜிப்பதை ஆத்மத்தியாகம் (தன்னய மறுப்பு) என்று சொல்லப்படாது. அதை ஆத்ம ஸ்வரூப விகாசமெனல் வேண்டும்.

சன்மார்க்க நிலை.



3வ. கொடுப்பது பகவானுடைய ஸ்வபாவமேயொழிய ஸ்வீகரிப்பதன்று; தாரை வார்ப்பது பகவானுடைய நோக்கமேயொழிய பிடிப்பதன்று; மனிதன் மிருக ஸ்வபாவத்தை விட்டு ஆத்ம ஸ்வரூபத்தை உணர உணர, அவன் தெய்வத் தன்மையில் பலப்படுகிறான்.

ஜடமாயாவாதம் பௌதீக சாஸ்திரத்தினால் அறுக்கப்பட்டது.

4வ. 'ஸகலப் பிராணிகளுக்கும் அதீதனாயுள்ள மஹாப் பிராணி யொருவருளர். ஸகல ஆன்மாக்களுக்கும் அதீதனாயுள்ள பரமாத்மா ஒருவருளர்,' என்னும் இந்த அற்புத தத்வார்த்தம் நமது ஸ்வானுபவ ஸித்தமாகக்கூடிய மார்க்கமேது? நமது தினசரி வியவகாரங்களில் அற்ப விஷயங்களிற் கூட ஆத்மத்தியாகமான காரியங்களைச் செய்வதினாலேயும், நமது மனோவாக் காய சேஷ்டைகளில் ஒவ்வொருவரிடமும் ஐக்கிய பாவத்தைக் காட்டி அந்தப்படி அனுஷ்டித்து வருவதாலும், ஐக்கிய பாவத்தைக் குறித்துப் பேசுவது மாத்திரமேயல்லாமல் ஒவ்வொரு சமயத்திலும் ஸ்வலாப புத்தியை நீக்கிவிட்டு பரோபகார புத்தியையே பிரதம கர்த்தவ்யமாக வெண்ணி நடந்து வருவதாலும் அது சாத்தியமாகும்.

உயர்வாழ்வின் தர்மம்.

5வ. தினந்தினம் சம்பவிக்கும் சிறு விஷயங்கள் சிறு சிறு மெல்லிய இழைபோன்ற பந்தங்களால் நம் மனத்தை விஷய நுகர்ச்சியில் ஸம்பந்திக்கும்படி செய்து கட்டுகின்றனவென்பதைக் கவனியாமல் அலக்ஷியம் செய்து, ஏதோ ஒரு பெரிய காரியம் நேரிடப் போகிறதென்றும், அதற்காகப் பெரியத் தியாகம் செய்திட வேண்டுமென்றும், அத்தியாகத்தைச் சரிவரக் கொண்டு செலுத்த நாம் ஆயத்தம் செய்ய வேண்டுமென்றும் ஸாதாரண ஜனங்கள் நினைக்கிறார்கள்.

யோக உபந்யாஸங்கள்.

6வ தன்னைத்தான் முற்றிலும் மறந்து, ஸ்வலீபத் தியாகம் சாதாரணமாய் யத்தனமில்லாமலே பிரவர்த்திக்கும் ஸ்திதியே யதார்த்தமான தியாகம் நிரம்பியுள்ள ஜீவியம்.

உயர்வாழ்வின் தர்மம்.

7வ மஹா புருஷனின் ஜீவிதாம்சம் ஒரு ரீதியாய் ஸாமான்ய மனிதனுடைய ஜீவியத்தில் பிரதிபிம்பிக்கக்கூடும்; எவ்விதமெனின், ஒவ்வொரு காரியத்தையும் தியாக புத்தியோடு செய்தல், அதனால் தனக்குண்டாகக்கூடிய பலனை உத்தேசிக்காமல் இதரர்களுக்கு உண்டாகக்கூடிய பலனையே எண்ணிச் செய்தல், தினசரி வாழ்க்கையில் நடத்தப்படும் ஸாமான்ய தர்மங்கள், காரியங்கள், ஸ்வலாப விஷயங்கள் இவைகளிடம் மனோவிர்த்தியை மாற்றுவதின் மூலம் ஸகலத்தையும் மாற்றுவது ஆகிய இவைகளாலேயே கூடும்.

குப்தமான கிறிஸ்து மதம்.

8வ பாஹ்ய ஜீவியத்தில் எவ்விஷயத்தையேனும் மாற்ற வேண்டிய அவசியமில்லை. எந்த விர்த்தியிடத்தேனும், தியாகம் அப்பியசிக்கத் தகும். எந்த வெளிப்படையான ஸ்திதிகளிலும் ஈசுவர ஸேவை செய்யத் தகும். (பலாபேக்ஷையும் அபிமானமுமின்றி ஈசுவரார்ப்பண புத்தியோடு, உலக நன்மைக்காகச் செய்யப்படும் வேலைகளெல்லாம் யக்ஞ ஸ்வரூபங்களே.)

குப்தமான கிறிஸ்து மதம்.

9வ நாம் உதவி செய்ய விரும்பும் ஜனங்களிடத்தில் நம் ஹிருதயங்கள் அனுதாபத்தால் துடித்துக் கொண்டும், அவர்கள் உணருவதுபோல் நாமும் உணர்ந்துகொண்டும், அவர்கள் பார்ப்பதுபோல் நாமும் பார்த்துக்கொண்டும் இருந்தாலொழிய நாம் அவர்களுக்கு உதவி செய்ய முடியாது. ஏனென்றால், அவ்வுதவியானது நமக்குள்ளிருந்து செய்யப்படுகின்றதே யொழிய நமக்கு வெளியிலிருந்தன்று. ஆகையால் அவர்களுடைய ஹிருதயங்களிலும் மனங்களிலும் நாம் வரவர அதிகமாய் பிரவேசித்து, எந்த உட்பிரதேசத்தி



லிருந்து ஒருவாறு அவர்களிடமில்லாத எதை நாம் அடைந்திருக்கிறோமோ அதை அவர்களுடன் பங்கிட்டுக் கொள்ளச் சாத்தியமாமோ அந்த உட்பிரதேசத்தில் நாம் அதிகமாய் அமர்ந்திருத்தல் வேண்டும்.

ஜகத்குருவின் வருகை.

10வ தியாகம் என்பது மற்றவர்களுடைய நன்மைக்காக இடைவிடாமல் வேலை செய்யும் சக்தி என்று பொருள்படும். உயர்ந்த உழைப்பாளியாகிய ஈசுவரனால் அவருடைய வேலைக்காரன் மூலமாய் செய்யப்படும் வேலையாகையால் அது ஒருக்காலும் தவறாது.

யோக உபந்யாஸங்கள்.

11வ நாம் இஷ்டப்பட்டால் இன்றுமுதலே அப்பெரியத் தியாகம் செய்ய ஆரம்பிக்கலாம்; நமது தினசரி வாழ்க்கையில் நம்மைப்போன்ற இதரர்களுடன் நாம் சம்பந்திக்கும் ஒவ்வொருகாரியத்திலும் அதை ஆரம்பித்து நடத்தாவிட்டால், நாம் மலையின் உச்சியிலிருப்பதுபோன்ற மேலான நிலைமையில் இருக்கும்போது மேலான தியாகத்தைச் செய்துவிட முடியாதென்று நிச்சயமாய் நினையுங்கள். தினம் தினம் தியாகம் செய்து, தினம் தினம் அதைச் சிந்தித்து, பெற்றுக்கொள்ளாமல் எப்பொழுதும் பிறர்க்குக் கொடுத்துக்கொண்டிருந்து இப்படிப் பழகிவரும் அப்யாசத்தினாலேயே உலகத்தாரால் பெரும் தியாகம் என்று சொல்லப்படுவதைச் செய்ய நாம் கற்றுக்கொள்ளலாம்.

உயர் வாழ்வின் தர்மம்.

12வ இப்படி அனுஷ்டித்து வருகையில், தியாகம் செய்தலென்பது, தான் பட்ட கடனைத் தீர்ப்பதில் ஒருவனுக்குள்ள சந்தோஷத்தினும் அதிகமாகிறது; மனிதனால் கொடுக்கக்கூடிய ஒவ்வொன்றையும் ஆனந்தமாய்க் கொடுப்பதாகின்றது.

சிஷ்ய மார்க்கம்.

13வ நம்மிடமிருப்பதை யெல்லாம் மிச்சமில்லாமல் தியாகம் செய்யும் அளவிற்குத் தக்கபடி ஈசுவரகிருபையா

னது பூரணமாய் நம்மிடம் வந்து சேர்ந்து, முன் நாம் அடைந்திருந்ததைவிட அதிகமாக அடைய இடமுண்டாகிறது. ஆகையால் நிவர்த்திமார்க்கத்தின் அடையாளம் தியாகமாகயிருக்கின்றது. தியாகம்செய்தல் ஜீவஸ்வபாவம், அபஹரித்தல் சரீரஸ்வபாவம்,

உயர்வாழ்வின் தர்மம்.

14வ அன்பு, தியாகம், சரியான ஞானம் இவைகள் ஸ்தூல உலகில் ஆத்மாவின் வெளித்தோற்றங்கள். ஏனெனில், ஆத்மா ஓரே ஒரு குணமுள்ள வஸ்து அன்று, அது முக்குண ஸ்வரூபமானது. அன்பு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு ஞானமும் முக்கியம்.

ஆன்ம வாழ்வு.

15வ பொருளுடையவர்கள் தியாகம்செய்யத் தயாராகிவிட்டால், அப்பொழுது ஆகாயத்தில் ஓர் புதுயுகம் உதயமாவது காணப்படும்; செல்வம், படிப்பு அதிகாரம் இவைகள் எல்லோருடைய க்ஷேமத்திற்காக நம்பிக்கையாய் வைக்கப்பட்ட பொருள்களென்று மதிக்கப்படும்போது, ஆஹா! அப்பொழுதே ஓர் மேன்மையான ராஜாங்கஸ்தாபனம் ஏற்பட்டுவிடும்.

மாறிவரும் உலகம்.

16வ ஆத்மாவின் இயற்கை ஸ்வபாவமானது, தனக்கென்ன கிடைக்குமென்று கேட்காமல், பிறர்க்கு என்ன கொடுக்கலாமென்று சதா கேட்டுக்கொண்டு, தன்னை முற்றிலும் தியாகத்தில் ஈடுபடும்படி செய்ய ஆசைகொள்வதேயாம்.

ஜீவியத்தின் சில பிரச்னைகள்.

17வ சமூக முன்னேற்றத்திற்குரிய ஒவ்வொரு இயக்கத்திலும் உயர்வான நோக்கம் தியாகம்; தாழ்வான நோக்கம் அன்பும் ஐக்கிய பாவமுமாம்; ஆகையால் எல்லோரும் ஒன்றுசேர்ந்துகொண்டு, ஒவ்வொருவனும் தன்னால் கொடுக்கக்கூடியதை கொண்டு வருகிறான். ஒருவனும் மற்றவனை அலக்ஷியம் பண்ணமாட்டான்; ஏனெனில் ஓர் ஜன நிர்மா



ணத்திற்கு ஒவ்வொன்றும் யாதொரு ஏற்றத்தாழ்ச்சியுமின்றி அவசியமாகிறது.

மாறிவரும் உலகம்.

18வ மனிதர்கள் தங்கள் ஐசுவரியத்தை வீணான உலக சுகத்தில் சிலவழிக்காமல், கல்வி கற்பிப்பதில் சிலவு செய்தார்களானால், அப்பொழுது உண்மையான ஆத்ம பரித்தியாகம் உண்டாகிவிடும். கலகங்கள் உண்டாகாமல் தடுக்கப்படலாம். ஏனெனில், மனிதர்கள் தங்களிடமிருந்து பொருள்களை பிறர் எடுத்துக்கொள்ளும் வரை காத்திராமலும், சட்டப்படி தங்கள் ஐசுவரியம் அபகரிக்கப்படும் வரை காத்திராமலும் தாங்களே கொடையளிக்கத் தயாராயிருப்பார்கள்

அதி சமீபகாலம்.

19வ அவர்கள் பொது ஜனங்களுடன் கலந்து பாகித்துக் கொள்வார்களானால்—பணத்தைப்பற்றி நான் நினைக்கவில்லை; தோழமை, சிநேக பாவம், உதவிபுரிதல், நாகரீகம், வித்தை ஆகிய இவைகளை அவர்களுடன் பங்கிட்டுக்கொள்ள வேண்டுமென்கிறேன்—இப்படி அவர்கள் செய்தால், கலகம் நேரிடுமென்ற பயம் நீங்கிவிடும்; ஏனெனில், பொதுஜனங்கள் விஷயத்தில் அன்பைக் காட்டியும், அவர்களுக்கு உதவி புரியும் காரியத்தில் ஈடுபட்டும் இருக்கின்ற ஹிருதயமுள்ளவர்களுக்கெதிரிடையாக யாரும் கிளம்ப இஷ்டப்படமாட்டார்கள்.

அதி சமீப காலம்.

20வ பணமானது உபயோகிப்பதில் அழிவடைகின்றது, ஆனால் அறிவும் அன்பும, பிறர்க்குக் கொடுப்பதிலும் மற்றவர்களுடன் பங்கிட்டுக் கொள்வதிலும் அதிகமாய்ப் பெருகுகின்றன. உங்களிடம் அறிவு இருந்து அதை நீங்கள் பிறர்க்குக் கொடுத்தால், அதனால் நீங்கள் தாழ்மையடைய மாட்டீர்கள். மற்றவர்களுக்குக் கற்பிக்க நீங்கள் முயற்சித்ததனால், நீங்களே அதிக அறிவுள்ளவர்களாகிறீர்கள்.

அதி சமீபகாலம்.

21உ உன்னையே நீ தியாகம் செய்துகொள்வதற்குத் தக்கபடி நீ உன்னை அறிந்துகொள்ளுகிறாய். மற்றவருக்காக உன்னுடைய உயிரை நீ கொடுப்பதனால் உன்னுடைய சொந்த தெய்வீகத் தன்மையை நீ அறிகிறாய்.

அதி சமீபகாலம்.

22உ கொடுப்பதினால் உண்டாகும் சந்தோஷத்தை நீ கற்றுக்கொள்ளும் பொழுது மாத்திரம் உன்னுடைய வாழ்வானது வ்ரவர சக்தியுள்ளதாய் ஆவதை நீ காணும்பொழுதும்—ஏனெனில் மற்றவருடைய வாழ்வுக்காக உன்னை நீ தியாகம் செய்துகொண்டபடியால்—அப்பொழுதுதான் மற்றவர்களுக்காக பூர்ணமாய் கைங்கரியம் செய்தலானது பூர்ண சுயேச்சையை அடைகிறதென்றும் நீயறிவாய். தன்னுடைய உயிரை மற்றவர்களுக்காக ஒருவன் கொடுப்பதினால், மனிதனிடமுள்ள நித்திய ஜீவனான ஆத்மாவைக் காணுகிறான்.

அதி சமீபகாலம்.

23உ தியாகமானது அதனுடைய அந்தரங்கமான பாவத்தில் கொடுக்கிறது அல்லது வெளியில் ஊற்றுவதாக பாவிக்கப்படும்; கொடுக்கவேண்டுமென்ற ஆசையினால் அது தூண்டப்படுகிறது. அதனுடைய கருத்து தன்னிடமிருப்பதை கொடுக்கவேண்டுமென்ற ஆவலில் இருக்கிறது. அதை வைத்துக் கொண்டிருப்பவனுக்கு அது முக்கியமாய் இருந்தாலும் மற்றவர்களுக்கு உதவி செய்வதிலும் சந்தோஷத்தை உண்டாக்குவதிலும் தாராளமாய்க் கொடுக்க இஷ்டப்படுகிறான்.

வெளிப் பிரகாரம்.

24உ வெளித்தோற்றத்தை விட்டு உட்பக்கமாக தியாகத்தைப் பார்க்கும் வழியானது, மற்றவர்களுக்குச் சந்தோஷத்தை உண்டாக்கவேண்டுமென்ற கருத்துடன் கொடுக்கிறது அல்லது ஊற்றுவது; ஆகையினாலே தியாகமென்ற செய்கைக்கு முக்கியமானது ஈகையானதால் அதன் கருத்து சந்தோஷமேயல்லாமல் துன்பமல்ல.

வெளிப்பிரகாரம்.

210813
210813

# “பாம்புகடி, தேள்கடி”

## இவைகளுக்கு கைகண்ட மருந்து.

விஷப்பாம்பு கடித்தவுடன் கடிவாய்க்கு மேலே இறுகக் கயிற்றை அல்லது துணியைக் கட்டவேண்டும். அது செய்யாமல் விஷம் தலைக்கேறி மயக்கமடைந்தாலும், பின் சொல்வது செய்தால் விஷம் நீங்கி ஆள் பிழைத்துவிடுவான்.

(1) துளசிச் சாற்றை தலை, நெற்றி, கழுத்து, மார்பு, தொப்புழ், முதலிய இடங்களில் தேய்த்துவரவேண்டும். (2) ஐந்து அல்லது பத்து நிமிஷத்திற்கு ஒருதரம் 20–முதல் 30–சொட்டு வரை வாழைப்பட்டைச் சாற்றை உள்ளுக்கு கொடுத்துக்கொண்டே வரவேண்டும். இந்த இரண்டு முறைகளையும் செய்துவந்தால் சில நாழிகைகளில் மயக்கம் தெளிந்து விஷம் பூருவும் நீங்கி விடும்.

துளசிச் சாற்றுக்குப் பதிலாக தாமரைக் கிழங்குச் சாற்றையும், கற்றாழைச்சாற்றையும் வெளியில் தேய்த்து உபயோகப்படுத்தலாம். ஆனால் தாமரைக் கிழங்குச்சாற்றை தலையில் மாத்திரம் தேய்க்கவேண்டும். வாழைமட்டைச் சாற்றுக்குப்பதிலாகப் பருத்தியிலையின் சாற்றை உள்ளுக்குக் கொடுக்கலாம். இவை யொன்றும் கிடையாவிட்டால் துளசிச் சாற்றைமாத்திரம் உடம்பு முழுவதும் தேய்த்துவந்து அதையே உள்ளுக்கும் கொடுத்துவந்தாலும் உயிர் போனதாகத் தோன்றும் நிலைமையிலும் உயிர் திரும்புகிறது.

மூட்டுச் தேள்கடிக்கும் துளசிச்சாற்றைத் தேய்த்துவந்தால் ஆச்சரியமான குணம் காட்டும். எந்த விஷத்திற்கும் “துளசி” சத்துரு என்று சாஸ்திரம் சொல்லுகிறது.

“ப்ரௌத்த பாரதா” என்கிற பத்திரிகையிலிருந்து அவசியமான வளவு மொழிபெயர்க்கப்பட்டது.

K. S. Ramachandra Iyyar,
*(Retired Tahsildar)*

# பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

குறைந்த சந்தாவில் நடைபெறும் உயர்ந்த
மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

எது ?

முன்னிலும் பெரிய அளவில் திருச்சியினின்று தவறாமல்
வெளியாகிவரும் ஒரே அரிய பத்திரிகையாகிய
**"நச்சினார்க்கினியன்" தான்.**

நாவல், நாடகம், வியாசம், விநோதக்கூற்று, சிறுவர்க்கானும் கதைகள், விடுவிப்பு வினாக்கள், வெளிவராத நூல்கள், ஒன்றையொன்றிகழாச் சமயக்கொள்கைகள், இந்து தேச சரித்திரக் கதைகள், சைவவைணவபுராண இதிகாசக் கதைச் சுருக்கம், தமிழ் நூலாராய்ச்சி, சமாசாரக்கொத்து, பரீக்ஷை வினாக்கள், பிறமொழி, நூல் மொழிபெயர்ப்பு, இனிய செய்யுட்கள் முதலியன இதில் தொடர்ச்சியாக வெளிவரும்.

வருட சந்தா ரூ. 2 தான். வெளி நாடுகளுக்கு ரூ. 2—8—0 விளம்பர விகிதம் வெகு சகாயம். அதைப்பற்றியும் இப்பத்திரிகையின் சந்தாதாரர்க்குரிய நலன்களைப்பற்றியும், பிற விஷயங்களைப்பற்றியும் பத்திரிகையிற் கண்டுகொள்க.

பண்டித: ம. கோபாலகிருஷ்ணையர், பத்திராதிபர்,
"நச்சினார்க்கினிய நிலயம்" "தெப்பக்குளம் போஸ்ட்," (திருச்சி.)

# "கலிகால தீபம்."

இம் மகுடநாமம் புனைந்த பத்திரிகையொன்று காரைநகர், மாணிக்கவாசக யந்திரசாலையில் இருந்து மாசம் ஒருமுறை பூரணை தோறும் பிரகடனமாகி வருகிறது. இதில் "கலிகால தீபம்" என்ற பெயருக்கேற்ப கலிகாலசம்பந்த விஷயங்களும், சாஸ்திர சமாதானங்களும், கைத்தொழில் விவசாயம் முதலிய அநேக அரிய நல்ல விஷயங்களும் எழுதப்பட்டு வருகின்றன.

## சந்தா விபரம்.

யாழ்ப்பாணம், இலங்கை இந்தியா முதலிய
இடங்களுக்கு ௵ ஒன்றுக்கு ரூபா 2.

பினாங்கு, சிங்கப்பூர், குவாலலம்பூர் முதலிய
மலாய் நாடுகளுக்கு ௵ ஒன்றுக்கு ரூபா 3.

தனிப்பிரதி சதம் 20

மாதிரிக்கொப்பி இனாமாக அனுப்பப்படும்.
தேவையானோர் எமக்கு எழுதிப்பெற்றுக்கொள்க.

விலாசம்:— மு. சபா[illegible]யர்.
"கலிகாலதீபம்" பத்திராதிபர்
காரைநகர், யாழ்ப்பாணம்.